உதயன்
சுடர் :36
கதிர் : 015
கார்த்திகை 25
வள்ளுவர் ஆண்டு
11 டிசெம்பர் 2020
வெள்ளிக்கிழமை
விலை 30 ரூபா
பக்கங்கள் 20
செய்தி: 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## கொரோனா காவு 146

கொழும்பு, டிசெ.11
கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்று இரவு அரச 14

# நிறைவேறியது கோத்தா பட்ஜெட்

- 54 எம்.பிக்கள் எதிராக வாக்களிப்பு
- '20' ஐ ஆதரித்த 5 முஸ்லிம் எம்.பிக்கள் நழுவல்
- சபாநாயகரின் 'பார்ட்டி'யை புறக்கணித்தது சஜித் அணி
- ஜனவரி 5 மீண்டும் நாடாளுமன்றம் கூடும்

கொழும்பு, டிசெம்பர் 11
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான மொட்டு அரசாங்கத்தின் கன்னி வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று திருத்தங்கள் சகிதம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. பாதீட்டுக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 54 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 19



## மனித உரிமை தினத்தில் உறவுகளை தேடிப் போர்

### வடக்கு, கிழக்கில் பரவலான கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11
சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி பல்வேறு தடை 19

## 'எதிர்த்துப் பயனில்லை' கூட்டமைப்பு விளக்கம்

கொழும்பு, டிசெ.11
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் மிக மோசமான வரவு - செலவுத் திட்டத்தால் எந்தப் 19

## விக்னேஸ்வரனும் வாக்கெடுப்பில் நழுவல்!

கொழும்பு, டிசெ.11
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக் 19

## முன்னணி எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.11
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கோத்தாபய அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான 19

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உண்மையில் நடந்தது என்ன?

*கஜேந்திரன் எம்.பி. கேள்வி*

கொழும்பு, டிசெ.11
இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 47 ஆயிரம் தமிழர்கள் இராணுவத்தினரிடம் அகப்பட்ட பின்னர் காணா 19

## மூக்குடைந்த பொலிஸார்!!

மட்டக்களப்பு, டிசெ.11
சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற் 14

## 'பட்ஜெட்' விருந்தில் சம்பந்தன்

கொழும்பு, டிசெ.11
கோத்தாபய அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று மாலை 19

## அரசியல் கைதிகள் விடுதலை: ஜனாதிபதி கையில் முடிவாம்!

*சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ.11
'தமிழ் அரசியல் கைதிகள்' என்று தமிழ் அரசியல்வாதிகள் கூறும் சிறைகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் அந்த அமைப்பின் ஆதரவா 07

## 'வீதியில் சுடுவோம்' பொலிஸ் மிரட்டல்!

உடுப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, டிசெ.11
வீதியில் சென்றவரை வழி மறித்த பொலிஸார் நாங்கள் 07

*முச்சந்தி முரளி*



"வாக்கெடுப்பில நைஸா நழுவிப்போட்டு, பின்னேர விருந்துக்கு போறதுக்கும் தனித் திறமை வேணும் பாருங்கோ"

## இலங்கையை மிரட்டும் புதிய வகைத் தொற்று!

### 500 பேர் இதுவரை பாதிப்பு!

கொழும்பு, டிசெ.11
இலங்கையில் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வரும் நிலையில், லீஷ்மேனியாசிஸ் என்னும் மற்றுமொரு ஆபத்தான நோய்த் தொற்றும் பரவி வருகின்றது என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தின் 07

இந்திய மீனவர் அத்துமீறல்

## செவிடன் காதில் ஊதிய சங்கு: கடலிறங்கும் முல்லை. மீனவர்!

முல்லைத்தீவு, டிசெ.11
முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்த, கட 14

## தந்தை குணமடைய மகன்களுக்கு தொற்று


யாழ்ப்பாணம், டிசெ. 11
யாழ்ப்பாணம் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்ற தந்தை குணமடைந்து வீடு திரும்பும் நிலையில், அவரது 14

## அளுத்கம, பேருவளையில் கொரோனா அச்சுறுத்தல்!

கொழும்பு, டிசெ.11
களுத்துறை மாவட்டத்தில் அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் பல வர்த்தக நிலையங்கள் 07

# வாடகைக்கு அமர்த்திய ஓட்டோவின் சாரதியைத் தாக்கி 'சிம் காட்' பறிப்பு

## வவுனியாவில் நேற்றிரவு சம்பவம்



வவுனியா, டிசெ. 11

**முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திச் சென்றவர்கள், அதன் சாரதியை தாக்கிய சம்பவம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றது.**

வவுனியா நகர தரிப்பிடத்தில் நின்றிருந்த முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திய ஒருவர் பல இடங்களுக்குச் சென்றுள்ளார். மற்றொருவரை அழைத்துக் கொண்டு பூந்தோட்டம் அகத்தியர் வீதியால் செல்லுமாறு தெரிவித்துள்ளார்.

குறித்த வீதியில் முச்சக்கர வண்டி சாரதியின் அலைபேசியை வாங்கிய அந்த நபர்கள் அதனை உடைத்தனர். சாரதியையும் தாக்கினர். அச்சமடைந்த சாரதி முச்சக்கர வண்டியை அந்த இடத்திலேயே விட்டு தப்பிச்சென்றார். சம்பவம் பற்றி வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். பொலிஸார் சாரதியையும் அழைத்துக்கொண்டு சம்பவ இடத்துக்குச் சென்றனர். சந்தேகநபர்கள் அங்கு காணப்படவில்லை. முச்சக்கர வண்டியை அதன் சாரதி எடுத்துச் சென்றார். எனினும், சாரதியின் அலைபேசி 'சிம் காட்'டை சந்தேகநபர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். அதைக் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்துவதற்கு எடுத்துச் சென்றனரா என்பது தெரியவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, வவுனியாவில் கடந்த வருடம் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். அவருடைய முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்திச் சென்றிருந்தனர் என்று கூறப்படும் நபர்கள் சாரதியைத் தாக்கி கொன்று விட்டு அவரிடமிருந்த உடைமைகளை எடுத்துச் சென்றிருந்தனர். இந்தக் குற்றச்சாட்டில் ஒருவர் விளக்கமறியலில் உள்ளார். (த110)

# கட்டாக்காலிகளை பிடிக்கச் சென்ற சபை ஊழியர்கள் மீது தாக்குதல்

முல்லைத்தீவு, டிசெ. 11

கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்காகச் சென்ற இரண்டு பிரதேச சபை ஊழியர்கள் மீது கால்நடைகள் வளர்க்கும் கிராமவாசிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட செல்வபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

காயமடைந்த ஒருவர் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-19)


# 'சிவப்பிராப்தி'க்கு பிரார்த்திக்கிறோம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் மு. திருஞானசம்பந்தபிள்ளையின் ஆத்ம சிவப்பிராப்திக்கு பிரார்த்தனை செய்கின்றோம் என்று கொழும்பு தெஹிவளையில் உள்ள இந்து குருமார் அமைப்பு அனுதாபம் தெரிவித்துள்ளது.

அவரது இறப்பு சைவ உலகுக்கு கவலைதரும் செய்தி. நீண்டகாலமாக சைவப்புலவர் சங்கத்தை சிறப்புடன் வழிநடத்தியவர். நாடு முழுவதும் சைவப் புலவர்களின் பெருக்கத்துக்கு திருஞானசம்பந்த பிள்ளையின் பங்களிப்பு மிக காத்திரமானதாக உறுதியானதாக அமைந்திருந்தது. சைவத்தின் மீது அவரது பற்றுதலின் ஆழத்தை வரிகளில் வடித்திட முடியாது என்று அமைப்பின் தலைவர் கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வரகுருக்கள் குறிப்பிட்டுள்ளார். (த)

# தம்மிக்கவின் மருந்தை சபாநாயகரும் ருசித்தார்



கொழும்பு, டிசெ. 11

கொரோனாவுக்கு ஆயுர்வேத பாணி மருந்து தயாரித்துள்ளேன் என்று கேகாலையை சேர்ந்த தம்மிக பண்டார கூறியிருந்த நிலையில், அந்தப் பாணி மருந்தை சபாநாயகருக்கும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேற்று வழங்கினார். அதனை அவர்கள் ருசித்து அருந்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மற்றும் பல அமைச்சர்கள் இந்த மருந்தை அருந்தியிருந்தனர். "இது கொரோனா வைரஸைக் குணப்படுத்தக் கூடியது" என்று தம்மிக்க கூறி

### கொரோனா காலம் என்பதால்

# வாகன வரிப்பத்திரம் பெற இப்படியொரு நடைமுறை

யாழ்ப்பாணம், டிசெ. 11

தற்போதைய கொரோனா நிலைமையில், வாகன உரிமையாளர் இல்லாவிடின், அவருடைய தேசிய அடையாள அட்டையின் பிரதியை பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் கொண்டுவந்தால் வாகன வரிப் பத்திரம் வழங்கப்படும் என்று சங்கானை பிரதேச செயலர் திருமதி பொ.பிரேமினி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களில் வாகன உரிமையாளர்கள் சிலர் பல்வேறு காரணங்களுக்காக கொழும்பு சென்று தங்கியுள்ளனர். அடிக்கடி வந்து செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. அதனால் யாழ்ப்பாணத்தில் நிற்கும் வாகனங்களுக்கு வரி செலுத்த முடியாதுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர். அத்தகைய நிலையில் ஒருவர், தனது உறவினர் ஒருவரின் மோட்டார் வாகனம் ஒன்றுக்கு வாகன வரிப் பத்திரம் பெற நல்லூர் பிரதேச செயலகத்துக்கு நேற்று சென்றுள்ளார். எனினும், உரிமையாளர் வந்தால்தான் வரியை செலுத்த முடியும் என்று கூறி அவரைத் திருப்பி அனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.இது குறித்து பிரதேச செயலரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு முறையைப் பின்பற்றுமாறு தெரிவித்துள்ளார். (த-20)

# மனித உரிமைகளுக்கு மரியாதையே இல்லை

## சாடுகின்றார் ரவிகரன்

முல்லைத்தீவு, டிசெ. 11

இலங்கையில் மனித உரிமை என்ற விடயத்துக்கு மரியாதையே இல்லை என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை தினமான நேற்று முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்த கவனவீர்ப்பில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு ஐ.நா. சபையில் உறுப்பு நாடாக இணைந்து 1955ஆம் ஆண்டு மனித உரிமை கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்ட போதும் தொடர்ச்சியாக தமிழர்களை அழிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுக்கின்றது.

இங்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இலங்கை அரசோ, அல்லது ஐ.நா. சபையோ தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தவறிவிட்டது. என்றார். (த-246)

# எல்.ஆர்.சி. காணிகளை மக்களுக்கு வழங்கவும்

## கரைச்சி சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ. 11

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைப் பகுதிக்குள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளை காணிகள் அற்ற பொதுமக்களுக்கு பங்கிட்டு வழங்கவேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சு.சுரேன் தலைமையில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது. அதில், மேற்குறித்த விடயத்தை தீர்மானமாக உறுப்பினர் கோகுல்ராஜ் முன்வைத்தார்.

சபையின் சகல உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். தீர்மானம் உரிய தரப்புக்கு கடிதம் மூலமாகத் தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தவிசாளர் குறிப்பிட்டார். (த)



தமிழுக்கும், சைவத்துக்கும் பெரும் தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 141 ஆவது குருபூசை தினம், வவுனியாவில் நேற்று நடைபெற்றது. (110)

# போரால் உயிரிழந்தோரை நினைவுகூர பொதுத்தினம்

## *சஜித் அணி சபையில் கோரிக்கை*

**கொழும்பு, டிசெ. 11**
**போரால் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு பொதுவானதொரு தினம் அறிவிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சண ராஜகருண தெரிவித்தார்.அத்துடன், அநீதிகள் இழைக்கப்படுவதால் முஸ்லிம் மக்கள் மத்தியில் நாட்டைவிட்டு வெளியேறிவிடலாம் என்ற எண்ணம் உருவாகியுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி அமைச்சுமீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இலங்கையில் இனங்களுக்கிடையில் இருந்த முரண்பாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தை முன்நோக்கி கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. 1983ஆம் ஆண்டு தமிழ் மக்களுடன் முரண்பாடுகள் ஏற்பட்டதால் பிரதான தமிழ் வர்த்தகர்கள் நாட்விட்டு வெளியேறினர். அதன் பின்னர் 3 சகாப்தகால போராலும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.
போர் முடிவடைந்த பின்னர்கூட அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு முன்னோக்கி பயணிக்கமுடியாத நிலைதான் நீடிக்கின்றது. குறிப்பாக போர் முடிவடைந்திருந்தாலும் இனப்பிரச்சினை தீரவில்லை. நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களின்போது முன்வைக்கப்படும் கருத்துக்கள் மூலமும் இது உறுதியாகின்றது. இவற்றை செவிமடுத்துக் கொண்டிருக்கும் தமிழ், சிங்கள மக்களுக்கிடையிலான முரண்பாடுகள் மேலும் வலுப்பெறும்.
உயிரிழந்தவர்களை நினைவுகூருவது தொடர்பில் கடந்த வாரம் கருத்தாடல் உருவாகியிருந்தது. போரால் எனது குடும்பத்தை சேர்ந்த மூவரும் இராணுவத்தில் இருந்து உயிரிழந்துள்ளனர்.
ஆனால் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று அனைத்து இன மக்களுக்கும் இருக்கவேண்டும்.
அதற்கான நிகழ்வை பிரபாகரனின் பிறந்தநாளிலோ அல்லது முதலாவது புலி உறுப்பினர் உயிரிழந்த நாளிலோ நடத்தவேண்டியதில்லை. போரால் உயிரிழந்த அனை வரையும் நினைவுகூருவதற்கு பொதுவானதொரு நாள் பிரகடனப்ப டுத்தப்படவேண்டும். இராணுவத்தினராக இருக்கலாம், சாதாரண சிவில் மக்களாக இருக்கலாம் அதேபோல தமிழ் மக்கள் சார்பில் புலி உறுப்பினர்களாக இருக்கலாம், சாதாரண சிவில் மக்களாக இருக்கலாம் இவ்வாறு போரால் உயிரிழந்த அனைவரையும் ஒரு நாளில் ஏன் நினைவுகூரமுடியாமல் உள்ளது? இனியும் இப்படியொரு சம்பவம் நடக்கக்கூடாது என்ற பிரார்த்தனையையும் அந்நாளில் நடத்தலாம். அரசியல் காரணமாகவே இதனை செய்யமுடியாமல் உள்ளது.
தமிழ் மக்களுடன் பிரச்சினைகள் இருந்ததுபோல அண்மைக்காலங்களில் முஸ்லிம் மக்களுடனும் பிரச்சினைகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன. அரசியல் இலாபம் தேடுவதற்காகவே முஸ்லிம் மக்களுடன் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. கருத்தடை மாத்திரை, கருத்தடை உணவு போன்ற கதைகள் தற்போது காணாமல்போயுள்ளன. அரசியலுக்காக இவ்வாறு இனத்தையும், மதத்தையும் பயன்படுத்துவது எமது நாட்டு பொருளாதாரத்துக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. பிரச்சினைகளால் தமிழ் மக்கள் அன்று நாட்டைவிட்டுச் சென்றனர். முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதால் அம் மக்களும் நாட்டைவிட்டுச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதால் சிங்கள மக்கள் மீது மக்களுக்கு கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது, என்றார். (ஒ,44)

# சிறைத் தொற்றாளர்களுக்கு யாழில் சிகிச்சை மையம்

கொழும்பு, டிசெ.11
சிறைச்சாலையில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் யாழ்ப்பாணம், கந்தகாடு மற்றும் கல்லெல்ல ஆகிய பகுதிகளில் சிகிச்சை மையங்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.அத்துடன். கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 14 குடியிருப்புகளை விரைவில் விடுவிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. குடியிருப்புகளில் வசிக்கும் அனைத்து குடும்பங்களையும் உள்ளடக்கும் வகையில் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படும். கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் தொற்றாளர் இனங்காணப்படுவது கணிசமாகக் குறைந்துள்ளது என அவர் தெரிவித்தார். (வ-இ)





# மனித உரிமைகள் தினத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடு

கிளிநொச்சி,டிசெ.11
பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான சர்வதேச விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் 16 ஆம் நாள் நிகழ்வுகள் மனித உரிமைகள் தினமான நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.
இன் நிகழ்வு கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டும் சர்வதேச நிகழ்ச்சி திட்டம் 16 நாள்களாக இடம்பெற்று வந்தது. கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவு நாளான நேற்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பெண்களின் பிரதிநிதிகளை அழைத்து விழிப்புணர்வு பயிற்சி பட்டறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.(ஐ-35)

# சிறைச்சாலைகளின் நெருக்கடிக்கு பிணை வழங்காததே காரணம்

## *கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.11
சிறைச்சாலைகளில் காணப்படும் கடுமையான நெருக்கடிகளுக்கு பிரதான காரணம் நீதிமன்றங்களால் பிணை வழங்கப்படக் கூடியவர்களுக்குப் பிணை வழங்காது சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவதே என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
சிறைச்சாலைகளில் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. பிணை வழங்கக் கூடியவர்களுக்கு பிணை வழங்காது இருப்பதே இதற்குக் காரணமாகும். இது பிழையான கொள்கையாகும். இதனைத் திருத்த வேண்டும். இந்த நபர்கள் நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்படாத காரணத்தால் அவர்களை நிரபராதிகளாகவே பார்க்க வேண்டும். வழக்கு விசாரணைகளுக்கு நீதிமன்றத்துக்கு வரமாட்டார், சாட்சியாளரை அச்சுறுத்தலாம். சாட்சியத்தை மாற்றலாம், சமூகத்துக்குள் அவரை அனுப்பினால் குழப்பம் ஏற்படும் என்று கருதினால் மட்டுமே சிறைக்கு அவர்களை அனுப்பலாம்.
இதனைத் தவிர வேறு காரணங்களுக்காக சிறைக்கு அனுப்ப முடியாது. ஆனால் இந்த முறைமையைப் பெரும்பாலான நீதிபதிகள் பின்பற்றுவதில்லை.
நீதிமன்றத்தில் மனித உரிமை மீறப்படுவதாகக் கருதினால் அவருக்கு நேரடியாக உயர்நீ திமன்றத்துக்குச் செல்லலாம். கிராமத்தவர்களுக்கு பணப் பிரச்சினை காரணமாக அவ்வாறு செல்ல முடியாத நிலைமையே காணப்படுகின்றது.
இவை எமது சட்டத்துறையில் காணப்படும் மிகவும் பலவீனமான விடயமே என்றார் . (ஐ-இ)


### மாவீரர் நாளில் கைதானவர்களுக்கு

# பொலிஸாரின் எதிர்ப்பால் மறியல் நீடிப்பு

திருகோணமலை, டிசெ.11
திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வீடியோக்களை வட்ஸ்அப் ஊடாக மாவீரர் தினத்தன்று பகிர்ந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களின் விளக்க மறியல் நீடிக்கப் பட்டுள்ளது.
திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் சமிலா குமாரி ரத்னாயக்க முன்னிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரையும் விடுவிக்குமாறு நேற்று முன்தினம் மூன்று சட்டத்தரணிகள் மன்றில் கோரியபோது பொலிஸார் வெளியிட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் இருவரதும் விளக்க மறியல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. குறித்த இருவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வீடியோக்களை மாவீரர் தினத்தன்று வட்ஸ்அப் ஊடாக பகிர்ந்தமை தொடர்பில் உப்பு வெளி பொலிஸார் அவர்களைக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# பயன்படுத்திய முகக்கவசங்களால் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு!

## எச்சரிக்கிறார் சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த



**கொழும்பு, டிசெ.11**
**கொரோனாத் தொற்றைத் தடுக்கப் பயன்படுத்தப் படும் முகக்கவசங்களை பயன்பாட்டுக்கு பின்னர் உரிய முறையில் அகற்றாது போனால் நாட்டில் மிகப்பெரும் சுற்றாடல் பிரச்சினை ஏற்பட வாய்ப் புக்கள் உள்ளன என சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

மேலும், கடந்த மார்ச் 17 ஆம் திகதி யிலிருந்து ஒக்ரோபர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 140 மில்லியன் ரூபா பெறுமதியான 495 தொன் முகக்கவசங் கள் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டி ருக்கின்றன. சுகாதார பிரிவின் தகவல்களின்படி இலங்கையில் உள்ள சுமார் 100 நிறுவனங்கள் முகக்கவசங்களை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரங்களை பெற்றுள்ளன.

இதன்படி கடந்த நவம்பர் மாதம் இறுதிவரை கே.என் 95 என்ற முகக்கவசங்களில் 15 மில் லியன் முகக்கவசங்களை இந்த நிறுவனங்கள் இறக்குமதி செய் துள்ளன என அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை பயன்படுத்திய முகக் கவசங்களை உரிய முறையில் அகற்றுவது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒழுங்கு விதிகளை சமர்ப்பித்துள்ளது.


எனினும் பயன்படுத்தப்பட்ட முகக் கவசங்களை உரிய முறையில் அகற்றுவது தொடர்பில் சுகாதார அமைச்சும் உரிய ஒழுங்கு விதி களை முன்வைக்க வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி அனில் ஜெய சிங்க தெரிவித்துள்ளார். (ந-இ)

## வரிசையில் நின்ற பெண் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.11
நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் வரிசையில் நின்ற பெண் ஒருவர் திடீரென கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.
வெளிநாட்டு கடவுச்சீட்டு மோசடியின் சந்தேக நபராக விளக்கமறியலில் உள்ள தனது உறவி னருக்கு பிணையாளியாக வந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இவர் ஆனமடுவ, கரிஹட்டிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்ற வளாகத்தில் வைத்து நெஞ்சு வலிப்ப தாகக் கூறி,திடீரென கீழே வீழ்ந்து உயிரிழந் துள்ளார்.
அவர் உயிரிழந்த இடம் கிருமி நீக்கம் செய்யப் பட்டுள்ளதுடன், அவரது சடலம் நீர்கொழும்பு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள் ளது. (ஐ-இ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பெரும் சூழ்ச்சிகள்

*அடிமுடி வெளிவரும் என்கிறார் வாசு*



கொழும்பு, டிசெ.11
உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பார தூரமான சூழ்ச்சிகள் உள்ளன. அவற்றின் அடிமுடி எதிர்காலத்தில் வெளிவரும் என்று அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் நீதி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
எம்.சீ.சீ ஒப்பந்தத்தை கையெழுத்திட வேண்டுமென்ற அவசரத்தின் பின்னணிகள் தொடர்பாக ஆராய்ந்தால் ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என் பதைக் கண்டுபிடிப்பது கடினமானதாக இருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



நல்லூர் வடக்கு ஜே.106 கிராம அலு வலர் பிரிவில் கடும் மழை காரண மாக பாதிக்கப்பட்ட சிவன் புதுவீதி மற்றும் பண்டாரக்குளத்தைச் சேர்ந்த மக்களுக்கு நல்லூர் சாய் இல்லத்தி னரால் இரு நாள்கள் சமைத்த உண வுகள் வழங்கப்பட்டன. (ஐ)

## மதுவரி திணைக்களத்துக்கு 2376 மில். டொலர் நிலுவை

கொழும்பு, டிசெ.11
இலங்கை மதுவரி திணைக்களத்துக்கு 2019ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் வரையான ஐந்து ஆண்டு காலத்துக்கு கிடைக்கப் பெற வேண்டிய வரி நிலுவை 2376.2 மில்லியன் டொலர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. கடந்த 7ஆம் திகதி கூடிய நாடாளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் இந்த விடயம் வெளியிடப் பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் மதுவரி திணைக் களத்துக்கு ரூ. 479.9 மில்லியன் வரிப்பணம் கிடைக்கப்பெற வேண்டும். அதன் தாமதத்துக்கான நிலுவைக் கட்டணம் ஆயிரத்து 896.3 மில்லியன் ரூபா ஆகும்.
இவற்றை வசூலிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கணக்கு கள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தமைக்கு இவற்றை வசூலிக்கும் நோக்கில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என மதுவரி திணைக்கள ஆணையாளர் நாய கம் உள்ளிட்ட அரச அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர். (வ-இ)

## யாத்திரைக்கு அரச அனுசரணை!

கொழும்பு, டிசெ.11
எதிர்வரும் உதுவப் பௌர்ணமி தினத்தை யொட்டி ஆரம்பமாகவுள்ள சிவனொலி பாதமலை யாத்திரையை அரச அனுச ரணையுடன் நடத்துவதற்கு ஆயத்தங் கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட் டில் தற்போது நிலவும் கொரோனாத் தொற்று காரணமாக சுகாதாரப் பிரிவு மற்றும் பாதுகாப்புப் பிரிவின் ஆலோச னைகளுக்கமைய இந்த யாத்திரை நடத்தப்படவுள்ளது. சுகாதார விதி முறைகளுக்க மைய இம்முறை பக்தர் களின் எண்ணிக்கை 200 ஆக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. (ற-இ)

## தென்கிழக்கு பல்கலைக்கு தரப்படுத்தலில் முதலிடம்

கொழும்பு, டிசெ.11
இலங்கை பல்கலைக்கழகங்களில் "யுஐ கிரீன்மெட்ரிக் தரவரிசை" (UI Greenmetric Ranking) 2020 இன் தரப்படுத்தலில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் முத லாம் இடத்தைப் பெற்றுள்ளது.
இந்த தரப்படுத்தலில் பங்குபற்றிய 922 பல்கலைக் கழகங்களில் உலகளாவிய ரீதியில் 331 ஆம் இடத் தையும் இலங்கையில் முதலாம் இடத்தையும் தென் கிழக்கு பல்கலைக்கழகம் பெற்றுக்கொண்டுள்ளது.
இலங்கையில் உள்ள ஆறு பல்கலைக்கழகங்கள் இந்த தரப்படுத்தலில் பங்குபற்றியபோதும், இப்பல் கலைக்கழகம் 5 ஆயிரத்து 975 புள்ளிகளைப் பெற்று இந்த இடத்தைப் பெற்றிருப்பதோடு "சில்வர் தரவரிசை" (Silver Ranking) எனும் தரத்தையும் அடைந்துள்ளது. (ந-இ)

## பெண்கள், சிறுவர்களுக்கே மருதமுனையில் சிகிச்சை

**இதுவரை 68 தொற்றாளர்கள் அனுமதி என்கிறார் வைத்திய அதிகாரி**

திருகோணமலை, டிசெ.11
கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் விசேட வைத்தியசாலையாக மருதமுனை பிரதேச வைத்தியசாலை மாற்றப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலை முழுக்க முழுக்க பெண்கள் மற்றும் சிறுவர்களை மட்டுமே அனுமதிக்க மாற் றம் கொண்டுவரப்பட்டுள்ளது என மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.ஆர். எம்.அஸ்மி தெரிவித்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என 68 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். சிகிச்சையளிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும், பிரதேச மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார். (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விசாரணைக்கு ஏன் இந்த அச்சம் !

இறுதிக்கட்டப் போரின் போதான போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறல் விவகாரம் மீண்டும் தூசு தட்டப்படுகின்றது. நடைபெற்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது இந்த விவகாரம் மீண்டும் பேசு பொருளாக்கப்பட்டுள்ளது. புதரில் மறைந்து கிடந்த விடயத்தை மலையின் உச்சியில் கொண்டு வந்து விட்டிருக்கின்றார்கள் விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமாரும்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் சரத் வீரசேகர, தமிழீழ விடுதலைப் புலிகளால் பாதுகாப்புக் கவசமாக பயன்படுத்தப்பட்ட தமிழ் மக்களை தமது படையினர் மீட்டார்கள் என்று கூறியிருந்தார். அதற்குப் பதிலடியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம், உங்கள் படையினர் எந்தவொரு தவறும் செய்யவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு ஏன் அஞ்சுகின்றீர்கள் என்ற கேள்வியை முன்வைத்தார்.

இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் அதே கேள்வியை முன்வைக்கின்றார்.

'பொதுமக்களைப் புலிகள் கவசமாகப் பாவித்தார்கள் என்றும் அரச படையினரே பொதுமக்களைக் காப்பாற்றினார்கள் என்றும் கூறுகின்றார்கள். ஆகவே தான் போர்க்குற்றங்களைப் புரியவில்லை என்றும் மக்கள் சேவையையே செய்தார்கள் என்றும் கூறுகின்றார்கள். அப்படியானால் தற்போது புலிகள் இல்லாத காலத்தில் மக்கள் அல்லவா அதனை வெளிப்படுத்த வேண்டும். ஆனால் மக்கள் கூறுவது என்னவென்றால் படையினர் தமது உறவுகளை கொடூரமாகக் கொன்று குவித்தார்கள் என்று. இந்த அரசியல்வாதிகள் கூறுவது உண்மையென்றால் எமது மக்கள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் வந்த தேர்தல்கள் யாவற்றிலும் நன்றி அறிதலுடன் அரச கட்சிகளுக்கே வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் உங்களால் புலிகளின் பதிலி என்று அழைக்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அவர்கள் வாக்களித்திருக்கின்றார்கள். மேலும் புலிகள் மக்களை கேடயமாகப் பாவித்தார்கள் என்றும் மக்களை காப்பாற்றியது தமது போர் வீரர்களே என்றும் அரசு கூறுவது உண்மை என்றால் எதற்காக அரசு சர்வதேச விசாரணை ஒன்றுக்கு முகம்கொடுப்பதற்கு பின்நிற்கின்றது? நீங்கள் கூறுவது உண்மை என்றால் அதனை விசாரணையின் போது நிரூபித்து உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடலாமே' என்று அழுத்தியுரைத்திருக்கின்றார்.

கஜேந்திரகுமாரும், விக்னேஸ்வரனும் கேட்பது ஒன்றைத்தான். 'மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் எதற்கு?' போர்குற்றங்களை சிறிலங்கா படையினர் இழைக்கவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு அஞ்சுவது ஏன்?

அரச தரப்பின் சார்பில் அமைச்சர் சரத் வீரசேகர, மஹிந்த ராஜபக்சகாலத்தில், அரசால் அமர்த்தப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களின் அறிக்கையை முன்னிறுத்தி நாம் சர்வதேச விசாரணையை முன்னெடுத்தோம் என்ற விளக்கத்தை முன்வைத்திருந்தார்.

பதிலுக்கு தமிழர் தரப்பு, தாம் சர்வதேச நிபுணர்களை நியமித்து அவர்களால் முன்னெடுக்கப்படும் விசாரணை அறிக்கையை முன்வைத்தால் அதனை அரச தரப்பு ஏற்றுக்கொள்ளுமா?

உடனே என்ன சொல்லுவார்கள். இது புலம்பெயர்ந்த புலிகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பணத்தைக் கொடுத்து அமர்த்தியவர்கள் முன்னெடுத்த விசாரணை. இது புலி களுக்கு வெள்ளையடிக்க மேற்கொள்ளப்பட்ட விசாரணை என்று கக்கமாட்டார்களா?

உங்களுக்கு வந்தால் இரத்தம் மற்றவனுக்கு வந்தால் தக்காளி சட்னியா?

எனவேதான் தமிழர் தரப்பு "உங்களுக்கும் வேண்டாம், எங்களுக்கும் வேண்டாம். சர்வதேச சுயாதீன விசாரணையை முன்னெடுங்கள் "என்று அழுத்திக் கூறுகின்றது.

நீங்கள் சொல்வதைப் போன்று புலிகள் குற்றமிழைத்திருந்தால் தமிழர் தரப்பு சர்வதேச விசாரணைக்கு அஞ்சியிருக்கும். தமிழர் தரப்பின் மடியில் கனமில்லை. அதனால்தான் சர்வதேச சுயாதீன விசாரணைதான் வேண்டும் என்று ஒற்றைக் காலில் உறுதியாக நிற்கின்றது.

உங்கள் தரப்பின் மடியில் கனமிருக்கின்றது. அதனால்தான் "சர்வதேச விசாரணை" என்ற சொல்லைக் கேட்டவுடனேயே, நீங்கள் புறமுதுகுகாட்டி, பின்னங்கால் முதுகில் எட்டித் தொடும்படி தெறித்தோடுகின்றீர்கள்.

# ரணிலை சிறைக்கு அனுப்பினால்தான் மஹிந்தானந்தவுக்கு நித்திரை வருமாம்

**கொழும்பு, டிசெ. 11**



**நல்லாட்சியில் இடம்பெற்ற குற்றங்களுக்காக ரணிலைச் சிறைக்கு அனுப்பினாலேயே எனக்கு உறக்கம் வரும். எனினும் இது அரசியல் பழிவாங்கல் அல்ல – என்று தெரிவித்தார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சியில் இடம்பெற்ற குற்றங்களுக்கு ரணில்-மைத்திரி மீது மாத்திரம் குற்றம் சுமத்தாது எதிர்க்கட்சியில் இன்று அமர்ந்துள்ள அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். நாம் ஒருபோதும் அரசியல் பழிவாங்கலை மேற்கொள்ள மாட்டோம். பொய்க் குற்றங்களைச் சாட்டி எவரையும் சிறையில் அடைக்க மாட்டோம். ஆனால் கடந்த காலத்தில் நடந்த குற்றங்களுக்காக வழக்குத் தொடுக்க வேண்டிய நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்போம், ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக இரண்டு வழக்குகளைத் தொடுப்பேன், அதில் நிச்சயமாக ரஞ்சன் ராமநாயக்க குற்றவாளியாவர்.

ஆனால் இறுதி நேரத்தில் வழக்கைத் திரும்பப் பெறுவேன். ஏனென்றால் உண்மையில் சிறைக்கு அனுப்ப வேண்டியது ரஞ்சனையோ வேறு எவருமையோ அல்ல, ரணில் விக்ரம சிங்கவையே அன்றே எனக்கு நித்திரை வரும் - என்றார். (ம-22)



## சட்டமா அதிபர் விடுதி வவுனியாவில் திறப்பு

வவுனியா, டிசெ.11

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கான உத்தியோகபூர்வ விடுதி வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று திறக்கப்பட்டது.

வட மாகாணத்துக்கான சட்டமா அதிபர் திணைக்களத்தின் விடுதியாக அமைக்கப்பட்டுள்ள இக் கட்டடத்தை சட்டமா அதிபர் தப்புல டி லிபேரா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்திருந்தார்.

இதன்போது சட்டமா அதிபர் திணைக்கள நிர்வாக பிரிவு அதிகாரி உட்பட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், நீதிபதிகள், வவுனியா மாவட்டச் செயலர், வட மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஜ-110)

## நீதிமன்றத் தீர்ப்பில் சுயாதீனம் இல்லை

### விஜித கேரத் சாட்டை

கொழும்பு, டிசெ. 11



நீதிமன்றத்தின் தீர்ப்புக்களில் சுயாதீனத் தன்மை இல்லை. ஜனாதிபதிக்கு சாதகமான முறையில் தீர்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையிலேயே நீதிபதி கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித கேரத்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிக்கு தேவையான முறையில் நீதிமன்ற தீர்ப்புகளை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றங்களின் தீர்ப்பு சுயாதீனமாக இடம்பெறுவதில்லை என்ற உணர்வு இளைஞர்களுக்கு ஏற்பட்டால் அது வேறுவிதமாக பிரதிபலிக்கும் ஆபத்து இருக்கின்றது. அதனால் நீதிமன்ற தீர்ப்புகளை அரசியலாக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ம-44)

# மனித உரிமைகள் தினத்தில் மட்டுமே மனித உரிமைகளைப் பற்றி பேசாதீர்

### மன். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் மட்டும் மனித உரிமைகள் பற்றிப் பேசுவது அதன் பிறகு அதை மறந்துபோவது இங்கு காணக்கூடியதாக உள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் நினைக்கப்படக்கூடிய ஒன்று. தனி மனிதனாக நாம் எதை எல்லாம் விரும்புகிறோம், நமக்கு எது எல்லாம் கிடைக்க வேண்டும், நாம் எப்படி எல்லாம் வாழ வேண்டும் என்று நினைக்கிறோமோ அவை அனைத்தும் பிற மனிதர்களுக்கும் கிடைப்பதற்கு நாம் தடையாக இருக்கக் கூடாது. அதுதான் மனித தர்மம். மனிதர்களில் ஏற்றத் தாழ்வு இல்லை. அனைத்து மனிதர்களும் சமமானவர்களே ஒவ்வொரு மனிதர்களின் தனித்தன்மை மதிக்கப்பட வேண்டும்.

'நெல்லில் மட்டுமே பதர் உள்ளது மனிதர்களில் பதர் இல்லை' ஒவ்வொரு மனிதர்களும் தனித் திறமை மற்றும் ஆளுமை கொண்டவர்கள். அவர்களுக்கான அங்கீகாரங்கள் வழங்கப்பட வேண்டும். நம்மைப் போலவே பிற மனிதனும் உள்ளான் என்னும் சிந்தனை இருந்தால் போதும் மனிதனை மனிதன் பழிவாங்கும் எண்ணம் நமது மனங்களில் தோன்றாது - என்றார். (ஜ-213)

# மன்னாரில் மேய்ச்சல் தரையை விரைவாக அடையாளப்படுத்துக

## பிரதேச செயலர்களுக்கு மாவட்டச் செயலர் பணிப்பு

**மன்னனார், டிசெ.11**

**மன்னாரில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை விரைவாக அடையாளப்படுத்துங்கள் என்று பிரதேச செயலாளர்களிடம் மன்னார் மாவட்டச் செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



மன்னார் மாவட்ட வருடத்தின் இறுதி விவசாயக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு பணித்தார்.

இது தொடர்பில் மேலு தெரிவித்த அவர்;

மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைவை இல்லாத பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது. கால்நடைகள் பராமரிப்பின்றி வீதிகளில் திரிவதால் பலவிதமான பிரச்சினைகளை அனைத்துத் தரப்பினரும் எதிர்நோக்குகின்றனர். எனவே அதற்கான தீர்வை விரைவாக எடுக்க வேண்டியுள்ளது. எனவே பிரதேச செயலாளர்கள் உங்களது பிரதேசங்களில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை விரைவாக அடையாளப்படுத்தித் தாருங்கள் அப்பொழுதுதான் அது எந்தத் திணைக்களத்திற்குச் சொந்தமாக உள்ளது என்பதை கண்டறிந்து கால்நடைகளுக்கான நிரந்தர மேய்ச்சல் தரையை உருவாக்க முடியும் என்றார்.

இந்த விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளின் குறை நிறை தொடர்பாக பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. கூட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட விவசாயப்பணிப்பாளர், நீர்பாசன திணைகளத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர், பல்துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் விவசாய அமைப்புகளின் தலைவர், செயலாளர், பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ப-213,56)

---

# சம்பள அதிகரிப்புக்குப் பதிலாக அரசாங்கத்தால் மாற்றுத் திட்டம்

## ஏற்கோம் என்கிறது சஜித் அணி

கொழும்பு, டிசெ.11

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்புக்கு பதிலாக மாற்றுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எம். உதயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டு ஒருமாத காலமாகும் நிலையில் இதுவரை அது தொடர்பில் பெருந்தோட்ட கம்பனிகள் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை. என்றாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். ஆனால் கம்பனிகள் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை ஒன்றிணைத்து ஆயிரம் ரூபா வழங்கும் நடவடிக்கைக்கு இறங்கி இருக்கின்றன என தெரியவருகின்றது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் கூட்டு ஒப்பந்தங்கள் ஊடாக சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும் அதனை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு கம்பனிகளும் அரசாங்கமும் வந்திருக்கின்றன என எமக்கு அறியக் கிடைக்கின்றது. சம்பள அதிகரிப்புக்கு பதிலாக மாற்றுத்திட்டமாக வெளிவாரி உற்பத்தி முறை ஒன்றை அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். அதனை நாங்கள் நிராகரிக்கின்றோம் -என்றார்.

(ப)

---

# துப்பாக்கிச்சூடு காரணமாக கைதிகள் இறக்கவில்லை!

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

மஹர சிறைச்சாலையில் பாதாள கோஷ்டிகளுக்கிடையிலேயே கலவரம் இடம்பெற்றுள்ளது. அதனைக் கட்டுப்படுத்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளபோதும், கைதிகளின் இறப்புக்கு துப்பாக்கிச் சூடு காரணமாக இல்லை என்று தெரிவித்தார் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் லொஹான் ரத்வத்த.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் ஆராய குழு அமைத்திருக்கின்றோம். அதன் இடைக்கால அறிக்கை தற்போது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. மஹர சிறைச்சாலையில் பாதாள குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் கலவரமாக மாறி இருக்கின்றது.

அதனை கட்டுப்படுத்தவே சிறைச்சாலை பாதுகாப்பு பிரிவினரால் துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டிருக்கின்றது. துப்பாக்கிச் சூடு கைதிகளை தாக்கியுள்ளது. ஆனால் கைதிகளின் இறப்புக்கு துப்பாக்கிச் சூடு காரணமாக இருக்கவில்லை. கலவரம் தொடர்பான முழுமையான விசாரணை கிடைத்ததும் வெளிப்படுத்துவோம் -என்றார். (ம-இ)

---

# முகாம்களில் இருந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பினர்

சாவகச்சேரி, டிசெ.11

வெள்ளம் காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் தமது சொந்த இருப்பிங்களுக்குத் திரும்பியுள்ளனர். இதனால் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்டு வந்த ஏழு இடைத்தங்கல் முகாம்களும் மூடப்பட்டுள்ளன.

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்து வீடுகளுக்கு திரும்பிய 77 குடும்பங்களைச் சேர்ந்த 287 பேருக்கான உலர் உணவுப் பொருள்கள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. மூன்று தினங்களாக மழை பெய்யாததால் வெள்ளம் வழிந்தோடியுள்ளது. இதனை அடுத்து முகாம்களில் தங்கியிருந்த மக்கள் தாமாகவே வீடுகளுக்குச் சென்றுள்ளனர். (ப-9)

---

# ஷானி அபயசேகரவின் கைது சட்டத்துக்குப் புறம்பானது!

## உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, டிசெ. 11

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகரவின் கைது, மற்றும் விளக்கமறியல் என்பன சட்டத்துக்கு அப்பாலான நடைமுறைகள் ஊடாக இடம்பெற்றுள்ளன என்று அறிவிக்குமாறு கோரி அவர் சார்பில் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஷானி அபயசேகர சார்பில் கம்பஹா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணை கோரிக்கையை அம்மன்று நிராகரித்துள்ள பின்னணியிலேயே, குறித்த கைது நடவடிக்கையை மையப்படுத்தி இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ம-இ)

---

# வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் உதவி வேண்டும்

## பாகுபாடு வேண்டாம் என்று மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி டிசம்பர். 11

வடக்கு மாகாணத்தில் வெள்ளப் பாதிப்பு அனைத்து மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நிலையில் நிவாரண விநியோகத்தில் உபங்கீட்டு அட்டைதாரர் புறக்கணிக்கப்படுவது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் வெள்ளத்திலிருந்து மீளவில்லை. இந்த நிலையில் பிரதேச செயலகங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. கிராம அலுவலர்களால் வாகனம் வைத்திருப்போர், அரச அலுவலர்கள் ஓய்வூதியம் பெறுவோர் தனியார் நிறுவனங்களில். பணிபுரிவோர் போன்றோர் தவிர்ந்த ஏனையோரின் பெயர்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கும் அதிகாரம் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. மாவட்டங்களில் வதியும் உயர் அதிகாரிகள் வெள்ள காலத்தில் இங்கு இல்லையா அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லையா என்று மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

(ப-9)

---

# இந்திய அபிவிருத்தித் திட்டத்தை பார்வையிட்டார் தூதுவர் வினோத்

கொழும்பு, டிசெ. 11

இந்தியாவின் துணைத்தூதுவர் வினோத் கே ஜேக்கப், மன்னாரில் இந்தியாவின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டார். கடந்த 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் அவர் மன்னாருக்கு பயணம் மேற்கொண்டார். இதன்போது மன்னாரில் மடு தேவாலயத்தில் யாத்திரிகர்களுக்காக அமைக்கப்பட்டு வரும் 144 தங்குமிடங்கள் தொடர்பில் ஆய்வுகளை நடத்தினார். அடுத்த வருடம் செப்ரெம்பருக்குள் இந்தத் திட்டத்தை 290 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



அதேநேரம் மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவிலில் மகாமண்டபம் மற்றும் ஏனைய பணிகளை 320 மில்லியன் ரூபா செலவில் செய்து முடிக்க இந்தியா தீர்மானித்திருக்கிறது என்றும் தனது பயணத்தின்போது தூதுவர் குறிப்பிட்டார். (ம-இ)

# சனிப்பெயர்ச்சி பலன்கள்!



ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.



## விருச்சிகம்

அடுத்தவரை வாழவைத்து மகிழ்பவர் நீங்கள். சனி பகவான் இப்போது 27.12.2020 முதல் 19.12.2023 வரை 3ம் வீட்டில் அமர்வதால், தொட்டதெல்லாம் துலங்கும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்றுசேர்வீர்கள். எதையும் முதல் முயற்சியிலேயே முடித்துக் காட்டுவீர்கள்.

தன்னம்பிக்கை துளிர்விடும். இழந்த செல்வம், செல்வாக்கை எல்லாம் மீண்டும் பெறுவீர்கள். ஆரோக்கியம் அடைவீர்கள். மனத்தைப் பக்குவப் படுத்திக் கொள்வீர்கள். குடும்பத்தில் இனி ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்தான். அழகிய வாரிசு உருவாகும். உங்கள் பெண்ணுக்கு நல்ல வரன் அமையும். கடன் உதவியுடன் வீடு கட்டிக் குடிபுகுவீர்கள். எதிலும் கறாராக இருப்பீர்கள். வழக்கில் இனி வெற்றிதான். எல்லோரும் ஆச்சர்யப்படும்படி சாதிப்பீர்கள். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் 4ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால், வேலைச் சுமை, வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் வரக் கூடும். தாயாருக்கு சற்றே உடல் நலக்குறைவு ஏற்படும். சனி பகவான் உங்களின் ஐந்தாம் வீட்டைப் பார்ப்பதால் பூர்வீகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். பிள்ளைகளின் உயர்படிப்பு, திருமணத்துக்காக அதிகம் செலவு செய்வீர்கள். சனி பகவான் உங்களின் 9ம் வீட்டைப் பார்ப்பதால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். சொத்து விவகாரங்களில் கவனம் தேவை. அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சனி பகவான் உங்களின் 12ம் வீட்டைப் பார்ப்பதால் உறக்கம் இல்லாமல் போகும். மகான்கள், சித்தர்களின் தொடர்பு கிடைக்கும்.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் தசம ஸ்தானாதிபதியான சூரியனின் உத்தராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனிபகவான் செல்வதால், எதிலும் வெற்றி உண்டு. சமயோசித புத்தியால் சாதிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. நல்ல தீர்ப்பு கிடைக்கும். தடைப்பட்ட வேலைகள் முடியும். 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனிபகவான் வக்ரத்தில் செல்வதால், ஓய்வெடுக்க முடியாதபடி அதிகம் உழைக்கவேண்டி வரும். டென்ஷன், மன உளைச்சல், மறைமுக பகைகள் அதிகரிக்கும்.

உங்களின் பாக்யாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால் திடீர் யோகம் உண்டு. பொன் பொருள் சேரும். பிதுர் வழிச் சொத்துகள் வந்து சேரும்.

25.05.2022 முதல் 09.10.2022 வரை சனிபகவான் வக்ரத்தில் செல்வதால் தந்தை யுடன் கருத்து மோதல்கள் வெடிக்கும். வீண் செலவுகள், காரியத் தடைகள் வந்து நீங்கும்.

உங்கள் ராசிநாதான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனி பகவான் செல்வதால் அழகு அறிவு கூடும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். 27.06.2023 முதல் 23.10.2023 வரை உள்ள காலத்தில் சனி பகவான் வக்ரமடைவதால் திடீர்ப் பயணங்கள், வீண் டென்ஷன், பாகப் பிரிவினையால் பிரச்சனைகள் வந்துசெல்லும்.

இல்லத்தரசிகளுக்கு உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவரின் வியாபாரத்தை முன்னின்று நடத்துவீர்கள். அலுவலகம் செல்லும் பெண்கள், விமர்சித்தவர்களும் வியக்கும்படி காரியம் சாதிப்பீர்கள்; சம்பளம் உயரும். வியாபாரிகள், கடையை நவீனமயமாக்குவார்கள். அனுபவம் மிகுந்த புது வேலையாட்கள் அமைவார்கள். விளம்பர யுக்திகளைச் சரியாகக் கையாண்டு பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். திடீர் லாபம் அதிகரிக்கும்.

உத்யோகஸ்தர்களே! பிரச்சனை தந்த மேலதிகாரி மாற்றப்படுவார். தடைப்பட்ட பதவி உயர்வு உடனே கிடைக்கும். சம்பள பாக்கியும் கைக்கு வரும். சிலருக்கு அதிக சம்பளத்துடன் கூடிய புது வேலை அமையும். வழக்கு சாதகமாகும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கும். கணினித் துறையில் இருப்பவர்களுக்கு, வேலைப்பளு அதிகமானாலும் அதற்குத் தகுந்த சம்பள உயர்வும் உண்டு.

**பரிகாரம்:** அருகிலுள்ள அனுமன் ஆலயங் களுக்குச் சென்று அனுதினமும் வழிபடுங்கள். கோயில் பணிகளுக்கு இயன்ற உதவியைச் செய்யுங்கள்; தடைகள் நீங்கும்.

---

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### அரசியல் கைதிகள்....

ளர்கள் ஆகியோரை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல்வாதிகள் கூறும் தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தாலேயே பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள்.

அவர்களில் தண்டனை விதிக்கப்பட்ட வர்களும், வழக்கு விசாரணையை எதிர் கொள்பவர்களுமே தற்போது சிறைகளில் உள்ளனர். அவர்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்கவேண்டும். அது தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது. தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் (சந்திரகாந்தன்) கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரிலேயே அன்று கைதுசெய்யப்பட்டிருந்தார். அதற்கான சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர் தற்போது விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த நல்லாட்சி அரசில் அரசியல் பழிவாங்கல் காரணமாகவே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப்ப ட்டிருந்தது.

பிள்ளையானின் விடுதலையை உதாரணம் காட்டி தாம் சொல்லும் 'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற தமிழ்க் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் வேண்டுகோள் விடுப்பது நியாயமற்றது. அவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்க வேண்டும்-என்றார். (எ-22)

### வீதியில்...

நினைத்தால் வீதியில் வைத்துச் சுடுவோம் என்று துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் உடுப்பிட்டியில் நடந்துள்ளது.

அச்சுறுத்தப்பட்டவர் இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரியவருகின்றது.

உடுப்பிட்டிப் பகுதியில் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவரை, மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸார் வழிமறித்துள்ளனர்.

தன்னைத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியதுடன், தகாத வார்த்தைகளால் பேசிய பொலிஸார், உடுப்பிட்டிச் சந்தியில் தாங்கள் மறித்தபோது நிற்காது தப்பியோடி வந்தார் என்று குற்றஞ்சாட்டினர் என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

அருகில் உள்ள பேக்கரி ஒன்றில் பாண் வாங்கிச் செல்கின்றேன் என்றும், உடுப்பிட்டிச் சந்திக்கு வரவில்லை என்றும் தெரிவித்ததுடன், பேக்கரியில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்தபோது, பொலிஸார் அதைக் காதில் வாங்காது, தொடர்ந்து அச்சுறுத்தினர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாங்கள் நினைத்தால் வீதியில் வைத்துச் சுடுவோம் என்று துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதுடன், தகாத வார்த்தை பேசி, பொலிஸார் மோட்டார் சைக்கிளைத் தள்ளிவிட முயன்றனர் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பலர் வேடிக்கை பார்த்திருக்க, அவரைப் பொலிஸார் உடுப்பிட்டிச் சந்திக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் அங்கிருந்த பொலிஸ் அதிகாரி, மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்றவர் இவரல்ல என்று தெரிவித்துள்ளார். அதையடுத்துப் பொலிஸார் அந்த நபரை விடுவித்துள்ளனர். அங்கிருந்த பொலிஸ் அதிகாரியின் கையில் விக்கெட் இருந்தது என்று அங்கிருந்தவர்கள் கூறுகின்றனர்.

மாலைவேளையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வது, அதிக அதிகாரத் திமிர்ப் போக்குடன் நடப்பது என, பொது மக்கள் அனைவரும் குற்றவாளிகள் என்ற போக்கில் நடந்து கொள்கின்றனர் என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-26,20)

### அளுத்கம.....

நேற்று முதல் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளில் 10க்கும் மேற்பட்டவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பேருவளையில் 4 ஹொட்டல்களில் கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அளுத்கமவில் 6 வர்த்தகர்களு க்குத் தொற்று உறுதியாகியுள்ளது. (எ-22)

### இலங்கையை....

பதவிய, நாச்சாதுவ, தலாவ, தம்புத்தேகம, நொச்சியாகம மற்றும் இபலோகம ஆகிய பகுதிகளில் இந்த நோய்த் தொற்று பரவியுள்ளது. இந்த நோய்த் தொற்றால் இதுவரை 500 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மனிதர்களைப் பாதிக்கும் தொற்று நோய்களில் லீஷ்மேனியாசிஸ் உலகில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. இது ஒரு ஒட்டுண்ணி நோயாகும். உலகில் 98 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்த நோயால் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்த் தொற்றுத் தொடர்பில் மக்களை தெளிவு படுத்தும் நிகழ்ச்சி ஒன்று இந்த மாதம் அநுராதபுரம் விஜயபுர பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ற-இ)

# நாட்டின் இறைமையை விட மக்களின் இறைமையே முக்கியம்

## மாறிவரும் உலக ஒழுங்கை இடித்துரைத்து விக்கி உரை

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நீதி அமைச்சின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை.

இந்நாட்டு மக்களின் இன்றைய மிக முக்கிய எதிர்பார்ப்புத்தான் நீதி கிடைக்க வேண்டும் என்பது, முக்கியமாக தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையுடனும் அவர்களின் வருங்காலத்துடனும் பின்னிப்பிணைந்திருப்பது நீதி என்பதேயாகும். அவர்கள் போரின் கடைசி நேரத்தில் கட்டுப்பாடின்றி கொடூரமுறையில் கொலை செய்யப்பட்ட அப்பாவி மக்கள் சார்பில் நீதி வேண்டி நிற்கின்றனர். தம் மத்தியில் இருந்து கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக அவர்கள் நீதி வேண்டி நிற்கின்றார்கள்.

எமது அரசியற்கைதிகள் வெகு நீண்ட காலமாக நீதி வேண்டி காத்துக் கொண்டிருக்கின்றனர். எமது முஸ்லிம் சகோதரர்கள் தம்முள் ஒருவர் நீதி அமைச்சராகத் தற்போது இருக்கும் போது கூட இறந்த தமது உறவுகளின் உடல்களைப் புதைக்க வேண்டும் என்று அனுமதிகேட்டு நீதி வேண்டி நிற்கின்றார்கள். எமது கத்தோலிக்க உறவுகள் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த குண்டு வெடிப்பில் இறந்துபோன தமது உறவுகள் சார்பில் நீதி வேண்டி நிற்கின்றார்கள்.

### நீதிக்காக அரசு பாடுபடுகின்றதா?

நீதியும் சமாதானமும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. சமாதானத்தை அடைய வேண்டுமென்றால் முதலில் உடலால், உள்ளத்தால், அறிவால் மற்றும் பொருள் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். எனவே இன்றிருக்கும் இந்த அரசு சமாதானத்தை வேண்டி நின்று நீதிக்காகப் பாடுபடுகின்றதா? அவ்வாறு நடக்க அரசு உற்சாகம் எடுப்பதாக எனக்குப் புலப்படவில்லை.


உங்கள் சக குடிமக்கள் மீது உங்களுக்கு சிறிதளவாவது கரிசனை இருந்தால் இன்று வரையில் வறிய தமிழ் மக்களின் காணிகளைக் கையேற்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கமாட்டீர்கள். வட கிழக்கில் தமிழ் மக்களிடையே பெருவாரியான சிங்களப் படையணியினரைத் தொடர்ந்து இன்று வரையில் நிறுத்தியிருக்கமாட்டீர்கள். பாதிக்கப்பட்டவர்கள் மீதும் வகையற்றவர்கள் மீதும் இந்த அரசுக்குக் கரிசனை இருந்திருந்தால் அவர்களிடமிருந்து எதனையும் பறித்திருக்கமாட்டாது. மாறாக உவந்து வந்து பரிந்து அவர்களுக்கு உதவிகள் புரிந்திருக்கும்.

### நாங்கள் தோற்கடிகப்படவில்லை

சக மனிதர்கள் மீது இந்த அரசுக்கு கரிசனை இருந்திருந்தால் அவர்கள் யாவரையும் அன்புடனும் மதிப்புடனும் நடத்த முன்வந்திருப்பார்கள். ஆனால் நீங்கள் எங்களிடம் இருந்து எமது காணிகளை, பாரம்பரிய வாழ்வு முறைகளை மற்றும் எமது சுதந்திரத்தையும் பறிக்கவே நடவடிக்கைகள் எடுத்து வருகின்றீர்கள். எம்மை போரில் தோற்றவர்கள் போன்றே தொடர்ந்து நடத்தி வருகின்றீர்கள். எம்மைச் சக மனிதர்கள் என்று எண்ணி நீங்கள் நடப்பதாகத் தெரியவில்லை. நாங்கள் எவரும் தோற்கடிக்கப்பட்டவர்கள் அல்ல. நாங்கள் சுதந்திரம் என்ற தீபத்தை எம் மனதில் அணையாமல் இன்றும் ஏந்தி வருபவர்களே!

ஒரு குற்றவாளியாவது தண்டிக்கப்பட்டானா?

நீதி பற்றிக் கூறும் போது இந் நாட்டில் நாங்கள் அப்பாவி மக்களை மறந்து குற்றவாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து பயணிக்கின்றோமோ என்று எண்ண வேண்டியுள்ளது.



ஏன் என்றால் 1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983ல் நடந்த தமிழ் மக்களுக்கெதிரான கலவரங்களில் அதன் போது நடைபெற்ற சித்திரவதை, கொலை, தீ வைத்தல் மற்றும் கற்பழித்தல் போன்ற குற்றங்கள் சம்பந்தமாக அவற்றைப் புரிந்த யாரேனும் ஒருவரையாவது இதுவரையில் குற்றவாளிகளாக்கியுள்ளேமா? முஸ்லீம் சகோதரர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுக்காக எவரேனும் ஒருவரை குற்றவாளியாக்கியுள்ளீர்களா? பொறுப்புக் கூறலுக்காக ஏதேனும் வெளிப்படையான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்களா?

### சிங்களவர்களே தீர்மானம்

முஸ்லிம் அமைச்சரும் தமிழ் அமைச்சரும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தாலும் சகல அதிகாரங்களும் பெரும்பான்மையினரின் கைகளிலேயே இருக்கின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களிலும் எதைச் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது சிங்களப் பெரும்பான்மையினரே. நாடு சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் இவ்வாறு தான் நிலைமை இருந்து வருகின்றது.

எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவர் கூடுதலான குற்றங்களையும் துன்பங்களையும் இழைத்துள்ளாரோ அவ்வளவுக்கவ்வளவு அவருக்கு வெகுமதிகளும் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டு வருவதே இந்நாட்டின் அரசியல் கலாசாரமாக மாறி விட்டது.

இந்தக் கலாசாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் புகுந்துள்ளது. அதனால்த் தான் கற்றறிந்த எமது நாடாளுமன்றத்தினர் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு சிறுபான்மையினர் பேசுவதைத் தடைசெய்ய முன்வந்துள்ளார்கள். சிறுபான்மையினர் உண்மையைக் கூறி உறுப்பினர்களதும் அரசினதும் பொட்டுக் கேடுகளை வெளிப் படுத்தவிடாமல் தடுத்து வருகின்றார்கள்.

### ஒழுங்குபடுத்தப்பட்ட இனவாதம்

தமிழ் மக்களுக்கெதிராகவும் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட இனவாதமானது இன்று கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. அரச திணைக்களங்கள் இதற்காகக் கருவிகளாகப் பாவித்து வரப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் எம்மைப் பேசாது தடுக்கும் உறுப்பினர்களும் இந்த இனவாத சித்தாந்தத்தையே பின்பற்றுகின்றார்கள். ஊடகங்கள் கூட அவர்களின் இந்த சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த கருவிகளாகப் பாவிக்கப்படுகின்றன. ஆனால் இனவாதம் எம்மை எங்கும் கொண்டுசெல்ல போவதில்லை. உண்மையில் இவ்வாறான சித்தாந்தங்கள் நாட்டைப் பேரழிவுக்குள்ளேயே தள்ளிவிடப் போகின்றன.

### தமிழ் பௌத்தர்கள்

வடக்கு கிழக்கைப் பாதிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டது எதற்காக? தான்தோன்றித் தனமாக அப்போதைக்குத் தேவையானபடி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு தொல்லியல் சிங்கள பௌத்த சின்னங்க ளைப் பாதுகாப்பதாகக் கூறி எம் மக்களின் காணிகள் கையேற்கப்பட்டு வருகின்றன. பௌத்த சின்னங்கள் வடக்கு கிழக்கில் இருப்பது உண்மை. அவை தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த காலத்தவை.

தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த காலத்து பௌத்த சின்னங்களைப் பாதுகாப்பதாகில் நீங்கள் பெரும்பான்மை தமிழ் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமிக்க வேண்டும். அவ்வாறு செய்யாதபடியால் தமிழர்களின் காணிகளைக் கையேற்று சிங்கள மக்களுக்கு அவற்றைத் தாரை வார்ப்பதே உங்கள் எண்ணமா? அதற்காகத்தான் மேற்படி ஆணைக்குழுக்களை அமைத்தீர்களா? வடக்கு கிழக்கைப் பாதிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றால் 3 ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அனுமதியுடனும் ஒப்புதலுடனுமே அவை எடுக்கப்பட வேண்டும்.

### தமது இறைமைக்காக ஆயுதம்

சிங்கள மக்களுக்கு எதிராகவோ அவர்களின் இறைமைக்கு எதிராகவோ எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. மாறாக ஒரே நாட்டினுள் தாம் வாழும் இடங்களில் அவர்களுக்கிருந்த இறைமை பறிபோகப் போகின்றதே என்று தான் ஆயுதம் தாங்கினார்கள். ஆனால் நடந்தது என்ன? அவர்களைப் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டி இருபதுக்கு மேலான நாடுகளின் உதவி களைப் பெற்று அவர்களைக் கொடூரமாகக் கொன்றொழித்தீர்கள்.

நாட்டின் இறைமையை விட மக்களின் இறைமையே மிகவும் முக்கியமானது. இது தான் தற்போதைய சர்வதேசக் கருத்தாகும். ஆகவே நாட்டின் இறைமையை முன்னிறுத்தி மக்களின் இறைமையை அழித்து விடலாம் என்று நாம் எம்மை ஏமாற்றாது இருப்போமாக! 18ம் நூற்றாண்டின் அரசியல் சித்தாந்தமாகிய நாட்டின் இறைமை என்பது தற்போது சர்வதேச நாடுகளால் முக்கியமாகக் கருதப்படவில்லை. அதாவது ஒரு நாட்டின் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுமானால் நாட்டின் இறைமையைக் கவனத்துக்கு எடுக்காதுவிடலாம் என்று கூறப்படுகின்றது. அதுவே நவீன கருத்தாகும்.

### போர்க்குற்றம் யார் செய்தார்கள்?

பொதுமக்களைப் புலிகள் கவசமாகப் பாவித்தார்கள் என்றும் அரச படையினரே பொதுமக்களைக் காப்பாற்றினார்கள் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். ஆகவே தான் போர்க்குற்றங்களை அவர்கள் புரியவில்லை என்றும் மக்கள் சேவையையே அவர்கள் செய்தார்கள் என்றும் கூறுகின்றார்கள். அப்படியானால் தற்போது புலிகள் இல்லாத காலத்தில் மக்கள் அல்லவா அதனை வெளிப்படுத்த வேண்டும். ஆனால் மக்கள் கூறுவது என்னவென்றால் படையினர் தமது உறவுகளைக் கொடூரமாகக கொன்று குவித்தார்கள் என்று. இந்த அரசியல்வாதிகள் கூறுவது உண்மையென்றால் எமது மக்கள் 2009ஆம் ஆண்டின் பின்னர் வந்த தேர்தல்கள் யாவற்றிலும் நன்றி அறிதலுடன் அரச கட்சிகளுக்கே வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் உங்களால் புலிகளின் பதிலி என்று அழைக்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அவர்கள் வாக்களித்திருக்கின்றார்கள். மேலும் புலிகள் மக்களை கேடயமாகப் பாவித்தார்கள் என்றும் மக்களை காப்பாற்றியது தமது போர் வீரர்களே என்று அரசு கூறுவது உண்மை என்றால் எதற்காக எமது அரசு சர்வதேச விசாரணை ஒன்றுக்கு முகம்கொடுப்பதற்கு பின்நிற் கின்றது? நீங்கள் கூறுவது உண்மை என்றால் அதனை விசாரணையின் போது நிரூபித்து உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடலாமே. அப்படி விடுபட்டால் நீங்கள் உலக நிறுவனங்களின் முன்னிலையில் நெஞ்சை உயர்த்தி வலம்வரலாமே!

ஆனால் உண்மை அதுவன்று. நீங்கள் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாக இருப்பதால்த்தான் நீங்கள் சர்வதேச விசாரணைகளில் பங்குபற்ற மறுத்து வருகின்றீர்கள். சர்வதேச விசாரணைகளைப் புறக்கணித்து சீனாவுக்குப் பின்னால் ஓட எத்தனிப்பது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன, மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் புரியப்பட்டன, இனப்படுகொலைகள் நடைபெற்றன என்பன அனுமானிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது.

### பொறுமைக்கு எல்லை

சர்வதேச சமூகத்தின் பொறுமைக்கு எல்லை உண்டு என்பதை மறக்காதீர்கள். மார்ச் மாத காலம் விரைவில் வர இருக்கின்றது! அதில் இருந்து தப்புவது மிகக் கடினமாகும்.

ஆனால் உங்களுக்கு ஒரு மார்க்கமுண்டு. அரசு புதியதொரு அரசமைப்பைக் கொண்டுவர இருக்கின்றது.

அப்போது அரசானது ஒரு சமஷ்டி அரசமைப்போ, பகுதி சமஷ்டி அரசமைப்பையோ, கூட்டு சமஷ:டி அரசரமைப்பையோ ஏற்று அதன் மூலமாக இந்நாட்டில் உள்ள சகல இனங்களும் சம உரிமைகளுடனும் ஒற்றுமையுடனும் சுதந்திரத்துடனும் மேலும் சுகவாழ்வுடனும் வாழ இடமளிப்பீர்களாக! உங்கள் அரசால்த் தான் இது முடியும்.

ராஜபக்ச குடும்பமானது வட கிழக்கு மக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் முற்றும் முழுதுமான அதிகாரப் பரவலை உறுதி செய்து, மலையக மக்களும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சமத்துவத்துடனும் சிநேகபூர்வமாகவும் வாழ இடமளிப்பீர்களாக!

இவ்வாறு நீங்கள் செய்யத் தவறினால் உலக நாடுகளின் தலைநகரங்கள் பலவற்றுக்கு போர்க் காலங்களில் போய் வந்தது போல் மேலும் போய் வரவேண்டி இருக்கும். ஆகவே இந்த அரசு எமது இன முரண்பாடுகளைத் துருவப்படுத்தி சர்வதேச வல்லரசுகளை, இலங்கையில் அவை இது வரையில் காலூன்றவில்லை என்றால், இனியும் காலூன்றாது தவிர்க்க நடவடிக்கைகள் எடுப்பீர்களாக! என்றார். (ஒ)

# கோத்தா ஜனாதிபதியாக நல்லாட்சியே காரணம்

*தலதா அத்துகோரல எம்.பி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.11

நல்லாட்சி அரசாங்கத்தில் நீதித்துறை சுயாதீனமாக இருந்ததன் காரணமாகவே கோத்தாபய ராஜபக்சவால் ஜனாதிபதியாக முடிந்தது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;


2015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலின் போது நாங்கள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம். இதன்படி 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நாங்கள் நிறைவேற்றினோம். இதனூடாக நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்தியிருந்தோம். இப்போது பலர் நீதித்துறை சுதந்திரம் தொடர்பாகக் கதைக்கின்றனர். அந்த நீதித்துறைச் சுதந்திரம் காரணமாகத்தான் கோத்தாபய ராஜபக்சவுக்கும் ஜனாதிபதியாக முடிந்தது. இரட்டைக் குடியுரிமை இருக்கும் போது வாக்குக் கேட்க முடியாது. இது தொடர்பாக நீதிமன்றத்திற்குச் சென்ற போது அது நிராகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி நீதித்துறையில் யாரும் தலையிடாத காரணத்தாலேயே அவருக்கு ஜனாதிபதியாக முடிந்துள்ளது. அன்று அவருக்கு எதிராக வழக்குகள் தொடர்பாகவும் யாரும் தலையிடவில்லை. பிணைமுறி மோசடி எங்களின் அரசாங்கத்தின் மீது இருந்த பெரிய குற்றச்சாட்டாகும். இது தொடர்பான விசாரணைகளை யாரின் ஆட்சியில் நடத்தியது. எங்களின் அரசாங்கத்திலேயே அந்த வழக்குகளும் நடத்தப்பட்டன. அதனை மூடி மறைக்கவும் முயற்சிக்கவில்லை - என்றார். (ப)

# பயங்கரவாதத்தை சகிக்கும் தன்மை எமது நாடுகளில் இல்லவே இல்லை

*வெளிவிவகாரத்துறை அமைச்சரிடம் பிரிட்டன், கனேடிய தூதர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 11

**தமது நாடுகளில் பயங்கரவாதத்தைச் சகிக்கும் தன்மை இல்லை. அத்தகைய போக்குக்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சரிடம் பிரிட்டன் மற்றும் கனேடிய தூதர்கள் தெரிவித்தனர்.**



பிரித்தானிய தூதுவர் சாரா ஹல்டன் மற்றும் கனேடிய தூதுவர் டேவிட் மெக்கின்னன் ஆகியோரை இந்த வாரம் சந்தித்த வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடினார். இதன்போதே தூதுவர்களால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது என்று வெளிவிவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த சில வாரங்களாக தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட புலிகளின் பயங்கரவாத செயல்களை மகிமைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அரசு சாராத செயற்பாட்டாளர்களின் அதிகரித்து வரும் நடவடிக்கைகளின் பின்னணியில், நாடுகளின் பாதுகாப்பு குறித்த பரஸ்பர அக்கறை குறித்து அமைச்சர் கலந்துரையாடினார். புதிய தலைமுறை இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தீவிரமயமாக்கலுக்கு இட்டுச் செல்லும் வகையில், பயங்கரவாதப் பிரச்சார நடவடிக்கைகளில் சிறுவர்களைப் பயன்படுத்துதல் குறித்து தூதுவர்களால் தீவிர கவனம் செலுத்தப்பட்டது.

பயங்கரவாத நடவடிக்கைகள் சார்ந்த சகிப்புத்தன்மையோ அல்லது பயங்கரவாதத்தை மகிமைப்படுத்தும் வகையிலான நோக்கங்களோ தமது நாடுகளில் இல்லை எனவும், அரசு சாரா நிறுவனங்களின் அண்மைய செயல்கள் எந்த வகையிலும் தமது உத்தியோக பூர்வ நிலைப்பாட்டின் மாற்றத்தைப் பிரதிபலிக்கவில்லை என்றும் தூதுவர்கள் தமது அரசாங்கங்களின் வலுவான நிலைப்பாட்டைத் தெரிவித்தனர்.

ஐக்கிய இராச்சியம் மற்றும் கனடா ஆகிய இரண்டு நாடுகளிலும் பயங்கரவாதக் குழுவாக தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் எழுச்சி பெறாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான அர்ப்பணிப்பு உட்பட பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போராட்டத்துக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்களுக்காக அமைச்சர் குணவர்தன தனது நன்றிகளைத் தெரிவித்தார் - என்றுள்ளது. (ம)

# நல்லாட்சியின் போது காணி முறைகேடுகள்

*விரைவில் அடுத்த நடவடிக்கை என்கிறார் அமைச்சர் சந்திரசேன*

கொழும்பு, டிசெ. 11

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் காணி திருத்தச் சட்டம் மீறப்பட்டுள்ளது. காணி முறைக்கேடு தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல்வாதிகளால் அரச காணிகள் மோசடி செய்யப்பட்டுள்ளன. காணி திருத்தச் சட்டத்துக்கு முரண்பட்ட விதத்தில் அரசியல்வாதிகள் அரச காணிகளை தங்களின் குடும்ப சொத்தாகப் பாவித்துள்ளார்கள். கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணி முறைகேடுகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களின் காணிகள்கூட அரசியல்வாதிகளின் ஆதரவுடன் மோசடி செய்யப்பட்டு பிறதரப்பினருக்கு கையகப்படுத்தப்பட்டுள்ளன. காணி முறைகேடுகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-இ)

# தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீருங்கள்!

*ராமேஷ்வரன் எம்.பி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 11

தோட்டத் தொழிலாளர்கள் பெரும் துன்பங்களுக்கு மத்தியில்தான் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் ராமேஷ்வரன் எம்.பி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு அதிகமான வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பவர்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். பெருந் தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் நடத்தைகள் தொடர்பில் தொழில் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பெருந்தோட்டங்கள் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அனைத்து வசதிகளும் இருந்தன. ஆனால், தற்போது அவ்வாறு இல்லை.

பெருந்தோட்டங்களை உருவாக்கிய தொழிலாளர்களையும் அந்தத் தொழிலையும் கௌரவிக்கும் வகையிலும் தொழில் அமைச்சர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் பணிபுரியும் தளத்தில் குளவிக் கொட்டு, பாம்புக் கடி மற்றும் சிறுத்தை தாக்க மென பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்க வேண்டும் - என்றார். (ம-இ)

# ஆயுர்வேத மருத்துவத்தை அலட்சியம் செய்யாதீர்கள்

*எதிர்கட்சியினரைக் கோருகிறார் வலுசக்தி அமைச்சர் கம்மன்பில*

கொழும்பு, டிசெ. 11

தேசிய பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ முறைமையை அலட்சியம் செய்வதை எதிர்த் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த அரசு அனைத்து மருத்துவ முறைமைகளிலும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பெருந்தொற்றுக்குச் சிகிச்சையளிக்கும் நோக்கில் ஆயுர்வேத மருத்துவர் தயாரித்த மருந்து குறித்து எதிர்த் தரப்பினர் அலட்சியமான கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்கள். பாரம்பரிய ஆயுர்வேத வைத்திய முறைமை முன்னேற்றத்துக்கு அரசாங்கம் தனி இராஜாங்க அமைச்சை அமைத்துள்ளது. ஆயுர்வேத மருத்துவ முறைமைக்கு என்றும் முன்னுரிமை வழங்கப்படும். நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்திகளுக்கும், தேசிய பாரம்பரிய வைத்திய முறைமைக்கும் முன்னுரிமை வழங்கவில்லை. ஆனால் எமது அரசாங்கத்தில் மேற்குல உற்பத்திகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்படமாட்டாது - என்றார். (ம-இ)



# மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கல்விபயிலும் மாணவர்களுக்கு புலம்பெயர்ந்து கனடாவில் வதியும் கிருதிகா தேவனால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் தொற்றுநீக்கிகள் என்பனவும் வழங்கப்பட்டன.

அத்துடன் இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இருவருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஐ-70)

## சமிக்ஞை விளக்கு இன்மை: தொடரும் விபத்துக்கள்



வவுனியா.டிசெ.11
சமிக்ஞை விளக்குகள் இன்மையால் வவுனியா மருத்துவமனை சுற்றுவட்டத்தில் தினந்தோறும் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. இந் நிலையில் குறித்த பகுதிக்கு சமிக்ஞை விளக்கு களை பொருத்துமாறு பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

குறித்த சுற்றுவட்டமானது வடமாகாணம் மற்றும் தென் பகுதிகளில் இருந்து வருகைதரும் அனைத்து வாகனங்களும் சந்திக்கும் ஒரு முக் கிய பகுதியாக காணப்படுகிறது.

இதனால் அதிகமான வாகன நெரிசல் காணப் படுவதுடன் ஒவ்வொரு நாளும் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமையைக் காணக்கூடிய தாகவுள்ளது.

நேற்றைய தினமும் குறித்த பகுதியைக் கடக்க முற்பட்ட காரும், மோட்டார் சைக்கிளும் மோதிய தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-110)

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் தடையல்ல

### சபையில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11
இலங்கையின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மன்னாரில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார்கள் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மன்னாரில் காற்றாலை மின் உற் பத்தி நிலையம் திறப்பது குறித்து எமக்குத் தெரியாது. எவரும் அறி விக்கவும் இல்லை; அழைப்பு விடுக் கப்படவும் இல்லை. நாடாளுமன்றத் தில் இருக்கும் நாம் வெற்றிலையில் மை பார்த்து நிகழ்வுகளுக்குச் செல்ல முடியாது. போருக்குப் பின் னர் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடந்தது என்பதை நாம் நிராகரிக்க வில்லை, ஆனால், வடக்கு கிழக் குக்காக ஒதுக்கிய நிதியை வைத்தே தெற்கின் அபிவிருத்தி வேலைத்திட் டங்களும் முன்னெடுக்கப்பட்டன என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது - என்றார். (ப-22)



கனடா வாழ் பனிப்புல மக்கள் உதவும் கரங்கள் அமைப்பின் நிதியுதவியுடன் மிகவும் பின்தங்கிய கிராமமான வவுனியா நெடுங்கேணி பட்டிக்குடியி ருப்பு அ.த.க.பாடசாலையில் கற்கும் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களின் பாடசா லைப் போக்குவரத்துச் சிரமத்தை நீக்குவதற்காக துவிச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளது. (ப-222)

## உந்துருளி இறக்குமதிக்கு நிபந்தனையுடன் அனுமதி

கொழும்பு. டிசெ. 11
இலங்கைக்குள் நிபந்தனைகள் சகிதம் உந்துருளிகளை இறக்குமதி செய்வ தற்கு அனுமதி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. போக்கு வரத்துத் துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித் துள்ளார்.

உந்துருளிகள் உற்பத்தி செய்யும் நிறு வனங்கள் உந்துருளிகளை பொருத்து வதற்கான தொழிற்சாலைகளை இலங்கையில் அமைப்பதற்கான இணக்கத்தை வெளியிட்டால் மாத்தி ரமே அந்த நிறுவனங்களின் உந்துரு ளிகள் இலங்கைக்கு இறக்குமதி செய் வதற்கு அனுமதி வழங்கப்படும் என திலும் அமுனுகம மேலும் தெரிவித் தார். (ம-இ)

## விடுதலை பெற்றுத்தந்த அனைவருக்கும் நன்றி

### தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

அரசியல் பழிவாங்கல்களில் இருந்து தனக்கு பாதுகாப்புக் கிடைத்துள்ளது இவ் இடர் நிலை மைகளில் தன்னுடன் சகல வழிகளிலும் ஒத்துழைத்த சகல ருக்கும் மனப்பூர்வமான நன்றி களைத் தெரிவித்துக் கொள் கிறேன் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாங்கள் அபிவிருத்திக்கு ஒரு போதும் தடையில்லை. எமது மக்கள் நீண்டகாலமாக அபிவி ருத்தியில் புறந்தள்ளப்பட்டே இருக்கின்றனர். அப்படியிருக்க எமது சபையால் முழுமையான அபிவிருத்தியை முன்னெடுப்ப தற்கு நிதி வளம் போதாது என் பது சகலரும் அறிந்த விடயம். உள்ளூராட்சி மன்றங்களைப் புறந்தள்ளி அரசியல் நோக்கங் களுக்காக மத்திய அரசாங்கத் தின் பொறிமுறை செயற்படக் கூடாது.

இதனை நான் வலியுறுத்துகை யில் ஜனநாயக ரீதியிலான அதிகாரப்பகிர்வை நடை முறைப்படுத்த முயற்சிக்கை யில் என் மீது அரசியல் ரீதியி லான பழிவாங்கல்கள் கட்ட வீழ்த்து விடப்படுகின்றன. கைது முயற்சி அரசியல் பழி வாங்கல் என்றபோதே நான் நீதிமன்றை நாடினேன். இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் தொலை பேசி வாயிலாக அறிவித்தேன். அரசியல் பழிவாங்கல் இடம்பெ றும் என்றால் பாதுகாப்புப் பெறு வது எனது உரிமை. நீதிமன்றம் எமது முன்பிணை மனுவை அராய்ந்து முன்பிணை அளித் துள்ளது. எனது கைதுக்கு எதி ராக திரண்ட மற்றும் ஒத்து ழைத்த தமிழ் அரசியல் தலை வர்கள், வழக்கை முன் கொண்டு சென்ற சட்டத்தரணி கள், தகவல்களை வெளிப்படுத் திய ஊடகங்கள், ஊடகவியலா ளர்கள், சிவில் சமூகத்தவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் என்றார். (ப)

# கொவிட்19 நிதிக் கையாளுகையில் வெளிப்படைத் தன்மை அவசியம்

### ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெனல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு. டிசெ.11
கொவிட் 19 வைரஸ் பரவலை எதிர்கொள்ளல் மற்றும் கட்டுப் படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய நிதி மற்றும் ஏனைய உதவிகள் குறித்து உயர் வெளிப்படைத்தன்மை பேணப்படுவது அவசியம் என ட்ரான்ஸ் பேரன்ஸி இன் டர் நெஷனல் அமைப்பு வலி யுறுத்தியுள்ளது.

இது குறித்து அவ்வமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தை நினைவுகூரும் அதேவேளை. மறுபுறத்தில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பலர் தமது அன் றாட வாழ்க்கையில் நிச்சய மற்ற நிலையை எதிர்கொண் டிருக்கின்றனர். இம்முறை 'நேர்மையாக மீள்வோம்' என்பது ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தின் தொனிப் பொருளாக உள்ளது. அத்த கைய மீட்சியை உறுதிசெய்வ தற்காக கொவிட் 19 வைரஸ் தொற்றுடன் தொடர்புடைய ஊழலைத் தடுப்பதில் விசேட மாகக் கவனம் செலுத்தியிருக் கிறோம். குறிப்பாக சமூகத் தில் மிகவும் நலிவடைந்த நிலையில் இருப்பவர்களுக் கான நிவாரணம் மற்றும் அத்தியாவசிய மருத்துவ சேவைகளை வழங்குவதில் ஊழலின் பாரதூரமான விளைவுகளைக் கருத்திற் கொள்ளும்போது இந்தத் தொனிப் பொருள் எமது நாட் டின் நிலவரத்துடன் நன்கு பொருந்துகிறது.

கொவிட் - 19 வைரஸ் பர வலை எதிர்கொள்ளல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்று டன் தொடர்புடைய நிதி மற் றும் ஏனைய உதவிகள் குறித்து உயர் வெளிப்படைத் தன்மை பேணப்படுவது அவ சியம் என்று வலியுறுத்தி இவ் வருட ஆரம்பத்தில் பிரத மருக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தோம் என்றுள்ளது. (ப)

## பல்கலைகளில் இருந்து பகிடிவதை அகற்றப்படும்

### அமைச்சர் பீரிஸ் உறுதி

இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் இருந்தும் பகிடிவதை அகற்றப்படும் என்று தெரிவித்தார் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் இருந்தும் பகிடிவதை அடியோடு அகற்றப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் எந்த சந்தேகமும், பயமுமின்றி தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும்.

மாணவர்களின் முழு வாழ்க்கையையும் சீரழித்து வாழ்க்கை முழு வதையும் பெரும் துயர நிலைக்குள் தள்ளும் பகிடிவதையை சில விரிவுரையாளர்களும் ஆதரிக்கின்றனர். இந்த நிலையிலேயே அதை முழுவதும் அழிப்பது சிரமமாக உள்ளது. எனினும் அனை வரதும் ஒத்துழைப்புடன் பல்கலைக்கழக கட்டமைப்பிலிருந்தே பகிடி வதையை இல்லாதொழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றார். (ம-இ)

# இந்திய இழுவைப் படகுகளை எதிர்த்து முல்லைத்தீவில் விரைவில் போராட்டம்

## சமாசத் தலைவர் அறிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 11

**இந்திய இழுவைப் படகுகள் தற்போது எமது கடற்கரையை அண்மித்து வருகைதரும் அளவுக்குத் துணிந்துள்ளன. இச்செயற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர விரைவில் நாம் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

முல்லைத்தீவு கடற்கரையை அண்மித்து, இந்திய இழுவைப் படகுகள் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக கடற்கரையில் இருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரத்துக்குள், அத்துமீறி நுழைந்து கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக விருந்தது. இதுதொடர்பில் முல்லைத்தீவு மீனவர்கள் கடற்படையினருக்குத் தெரியப்படுத்தியபோதும், கொரோனா அச்சம் காரணமாக இந்திய இழுவைப் படகுகளுக்கு அருகே செல்ல முடியாதென கடற்படையினர் மறுப்புத்தெரிவித்துள்ளதுடன், மீனவர்களையும் இந்தியன் இழுவைப் படகுகளுக்கு அருகே செல்லக்கூடாது என உத்தரவிட்டுள்ளனர். இந்திய இழுவைப் படகுகள், இழுவை முடிகளைப் பயன்படுத்தி தமது கடற்றொழில் செயற்பாடுகளை முன்னெடுப்பதால் முல்லைத்தீவு கடல்வளம் பாதிக்கப்படுவதுடன், எமது மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்திய இழுவைப் படகுகளால் முல்லைத்தீவு மீனவர்களின் வலைகள் சேதப்படுத்தப்பட்டும் வருகின்றன. இது தொடர்பில் கடற்படையினர், மற்றும் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும், எவரும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க முன்வருவதில்லை. இந் நிலையில் நாளுக்குநாள் இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளதுடன், அவர்கள் தற்போது எமது கடற்கரையை அண்மித்து வருகைதரும் அளவுக்குத் துணிந்துள்ளனர். எனவே இந்தச் செயற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர விரைவில் நாம் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ப-246)

# மூதாட்டியைத் தீண்டியது பாம்பு

கொடிகாமம், டிசெ. 11

பாம்புக் கடிக்கு இலக்கான வயோதிப் பெண் ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

கெற்பேலி மத்தி மிருசுவிலைச் சேர்ந்த இராசபை இராசலட்சுமி (வயது - 70) என்பவரே பாம்பு கடிக்கு இலக்காகியுள்ளார்.

புரேவி புயல் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்துடன் வந்த பாம்பு ஒன்றே அவரைக் கடித்தது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-159)

# மோ. சைக்கிள் – ஓட்டோ விபத்து தம்பதியர் காயம்

கொடிகாமம், டிசெ.11

முச்சக்கரவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில், கணவன் - மனைவி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கணவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நாவற்குழியில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்றுள்ளது.

நாவற்குழிப் பாலத்துக்கும், நாவற்குழிச் சந்திக்குமிடையில் உள் ஒழுங்கையில் இருந்து ஏ/9 வீதியில் ஏற முற்பட்ட மோட்டார் சைக்கிள் ஏ/9 வீதியில் பயணித்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது. நான்காம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த மகேந்திரன் சிறீகரன் (வயது-59)மற்றும், அவரது மனைவியான சிறீகரன் மோகனராணி (வயது - 58) ஆகியோரே காயமடைந்தனர். (ப- 159)

# மருத்துவர் வராததால் நோயாளிகள் சிரமம்

## ஓமந்தையில் சம்பவம்

வவுனியா, டிசெ.11

வவுனியா ஓமந்தை மருத்துவமனை மருத்துவர் உரிய நேரத்துக்கு வருகைதராததால் நோயாளிகள் அவதியுறுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து 10 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள இவ் மருத்துவமனையில் ஓமந்தை , சேமமடு, மருதமடு, பாலமோட்டை, குஞ்சுக்குளம், அரசமுறிப்பு, அரசன் குளம், ஓமந்தை வேப்பன்குளம், அரச ஊழியர் வீட்டுத்திட்டம், மாணிக்கவளவு, பறநட்டகல், அரசங்குளம் பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகள் இங்கு வருகை தருகின்றனர். மருத்துவர் உரிய நேரத்துக்கு சில வேளைகளில் சமூகமளிப்பதில்லை சனிக்கிழமைகளில் வருகைதராததால் அரச ஊழியர்கள் உட்பட பலரும் சிரமப்படுகின்றனர்.

இம் மருத்துவமனை மருத்துவர் விடுமுறையில் நின்றால் புளியங்குளம் மருத்துவமனை மருத்துவர் வருகைக்காக 2 மணித்தியாலத்துக்கு மேல் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் நோயாளிகளுக்கு ஏற்படுகிறது. இந்த நடவடிக்கை அடிக்கடி நிகழ்வதால் நோயாளிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-402)

# வான்பாயும் குளங்களில் விடப்பட்ட மீன்குஞ்சுகள்

## திணைக்களம் மீது மீனவர்கள் அதிருப்தி



முல்லைத்தீவு,டிசெ.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள வான்பாயும் ஆறு குளங்களில் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

குளங்கள் வான் பாய்கின்ற நிலையில் மீன்குஞ்சுகள் பாய்ந்து ஆற்றிலும் கடலிலும்தான் சென்றடையும் என்று நன்னீர் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொய்கா நிறுவனத்தின் நிதிஅனுசரனையில் உலக உணவுத் திட்டம் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிறுவனம் ஆகியன இணைந்து மீன்குஞ்சு விடும் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

தேறாங்கண்டல் குளம்,ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டை கட்டிய குளம் உள்ளிட்ட 6 குளங்களில் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

22 இலட்சம் ரூபா பெறுமதியான 8 இலட்சம் மீன்குஞ்சுகள் இவ்வாறு விடப்பட்டுள்ளன. (ஐ-19)

# புயலால் பாதித்தோருக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.11

புரேவி மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அரியாலை முள்ளி மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு உலருணவு பொருள்கள் வழங்கப்பட்டன.புங்குடுதீவு உலக மையம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் குணாளனின் ஏற்பாட்டில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் நிதியுதவியில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-ரி4)



கிளிநொச்சி கல்வி வலயத்தின் கண்டாவளைக் கோட்டத்தில் 2020 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை அர்பணிப்புடன் பயிற்றுவித்த அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். நேற்றுமுன்தினம் தர்மபுரம் இல1 பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கலந்து சிறப்பித்தார். (ஐ-55)

# பிரசன்னவின் கருத்து கண்டனத்துக்குரியதே

## வடக்கு முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.11

தமிழர்களுக்கு மூன்று வேளை உணவு மாத்திரம் போதும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்த கருத்து கண்டனத்துக்குரியது என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் வட மாகாண முன்னாள் அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தமிழர்கள் மூன்று வேளை உணவை மாத்திரமே விரும்புகின்றனர் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கும் கருத்தானது கண்டனத்துக்குரியதுடன், பொறுப்பற்ற ஒரு கருத்தாகவே பார்க்க முடியும். ஒரு நாட்டின் முக்கிய பொறுப்பில் உள்ள அமைச்சர் ஒருவர் இப்படியான எதேச்சிகாரமான கருத்துக்களைக் கூறி தமிழ் மக்களைக் கிள்ளுக்கீரையாக அடையாளப்படுத்த முற்படுகின்றார்.

ஆளும் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இனவாத நோக்குடன் இப்படியான வன்மம் மிகுந்த கருத்துக்களைக் கூறி வரும் நிலை அண்மைய நாளகளாகத் தொடர்ந்து நீடித்து வருகின்றது. தமிழ் மக்களை எரிச்சலூட்டும் இப்படியான கருத்துக்களைத் தெரிவிப்பதை அவர்கள் உடனடியாக நிறுத்திகொள்ள வேண்டும். இவ்வாறான கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கும் போது தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தோர் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர். மக்கள் இவர்களை யும் அறிந்துகொள்ள வேண்டும் என்றுள்ளது. (ப-110)



## இன்றைய நாள்

**மேடம்:** சுபச்செலவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த கவனம் தேவை பணியாளர்கள் வளர்ச்சி பெற சூழ்நிலைகள் ஏதுவாக இருக்கும்.

**இடபம்:** உழைப்பு அதிகம் தேவைப்படும். அதன் பலன்களும் நன்றாக இருக்கும். மேலிடத்தின் மூலமாக நடக்க வேண்டிய நன்மை கூடிவரும். உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**மிதுனம்:** அலுவலகத்தில் யாருக்கும் ஆலோசனை வழங்காதீர்கள். உத்யோகஸ்தர்கள் பணியில் கவனமாகச் செயல்படுவது நல்லது. பணிபுரிபவர்கள் கவனமாக செயல்படவும்.

**கடகம்:** சுபநிகழ்ச்சிகள் பற்றிய பேச்சு வார்த்தைகள் நன்கு முடியும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்திகள் வந்து சேரும். சில விஷயங்களை அலைந்து திரிந்து நல்லபடியாக முடிப்பீர்கள்.

**சிம்மம்:** தள்ளிப்போட்ட விஷயங்களில் ஒன்றை இன்று முடிப்பீர்கள். பணிபுரியும் இடங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நெருங்கிய நண்பர்களுடன் வாக்குவாதம் வந்து நீங்கும்..

**கன்னி:** அலுவலகத்தில் யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. மகிழ்ச்சியான நாள். எந்தக்காலத்திலோ செய்த முதலீடு நல்ல லாபம் தரும்.

**துலாம்:** புதிய வேலை பற்றி இன்று நல்ல தீர்மானம் எடுப்பீர்கள். வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு நல்ல செய்திகள் தேடி வரும். நினைத்த விஷயத்தை முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** பழைய கடன் தொல்லை தரலாம். மன மகிழ்ச்சி குறையாது. புதிய விஷயங்களில் ஈடுபடும் முன் அதிக கவனம் தேவை. காத்திருந்ததற்கு நற்பலன் உண்டு.

**தனுசு:** பெண்களுக்கு இன்றைய நாள் இனிமையான நாளாக அமையும். பணிகளில் கவ்னத்துடன் செயல்படுங்கள். நேரம் விரயமாகும். குடும்ப ஒற்றுமை மேம்படும்.

**மகரம்:** உங்கள் துறைகளில் ஓரளவு வளர்ச்சி காண்பீர்கள். குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றி மறையலாம் எதிரிகளைச் சமாளிப்பீர்கள். விமர்சனங்களைப் புறக்கணியுங்கள்..

**கும்பம்**வாழ்வில் முன்னேறும் முயற்சிகளை அதிகப்படுத்துவீர்கள். அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு நல்ல தகவல்கள் வரும்.

**மீனம்:** பெண்கள் குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நெடுநாளாக நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வருவார்.

# மட்டக்களப்பில் டெங்கு அபாயம் அதிகரிப்பு!!



**மட்டக்களப்பு, டிசெ.11**
**மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி பெய்து வரும் மழையால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து வருகின்றது.**

இதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை சுகாதார திணைக்களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். பொதுமக்கள் தங்களின் வீடுகளிலும் சுற்றுச் சூழல்களிலும் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களைக் கண்காணித்து அடிக்கடி சுத்தப் படுத்திக் கொள்ளவேண்டும்.

டெங்கு நோய்த் தாக்கமானது இலங்கையில் கொரோனா மரணங்களை விட அதிகளவான மரணங்களை கடந்த காலங்களில் ஏற்படுத்தியுள்ளது.

எனவே நமது சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள்ளது.

கடந்த வாரம் 120 டெங்கு நோயாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சிகிச்சை கள் நடை பெற்று வருகின்றன.

குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் தான் அதிகளவு டெங்கு நோய்த் தாக்கத்ததுக்குள்ளாகின்றனர். எனவே அனைவரும் அவதானமாக செயற்பட வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-இ)

# ரூபா ஒரு கோடி பெறுமதியான ஹெரோய்னுடன் இருவர் கைது!

கொழும்பு, டிசெ.11

மஹபாகே, வெலிசறைப் பகுதியில் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இவர்களிடமிருந்து 898 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர்கள் போதைப்பொருளை பொதி செய்து கொண்டிருந்த வேளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர்கள் எனத் தெரியவருகின்றது.

இருவரும் வத்தளை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (ற-இ)



# ஓமந்தை வீதியோரம் நான்கு மாடுகள் சாவு!

வவுனியா, டிசெ.11

வவுனியா ஓமந்தை எரிபொருள் மீள் நிரப்பு நிலையத்துக்கு அருகே ஏ-9 வீதியில் நான்கு மாடுகளின் உடல்கள் சிதைந்த நிலையில் நேற்று அதிகாலை முதல் காணப்படுகின்றன.

வவுனியா யாழ்ப்பாணம் பிரதான வீதீயான ஏ9 வீதியில் வாரத்தில் இரு தடவையேனும் கட்டாக்காலி மாடுகளால் வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் வாகனம் மாடுகளின் மீது மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என ஓமந்தைப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-18)

# மஹரவில் உயிரிழந்த 8 பேர் அடையாளம்!!!



கொழும்பு, டிசெ.11

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது உயிரிழந்த மற்றுமொரு கைதியின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், உயிரிழந்த 11 கைதிகளில் 8 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 228 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

அந்தவகையில் சிறையதிகாரிகள் 70 பேர், 11 வைத்தியர்கள், 17 தாதியர்கள் மற்றும் 128 கைதிகளிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறைச்சாலையில் கலவரம் ஏற்படக் காரணம் என்ன, இதற்குத் தலைமை வகித்தது யார், பின்புலத்தில் செயற்பட்டவர்கள் யார் உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒளிப்பதிவுக் காட்சிகளின் அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார். (ற-இ)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

The HALO Trust is seeking an experienced candidate to fill the following positions:

The HALO Trust is a UK based non-political, non-religious Non-Governmental Organization specialized in the removal of the land mines and other explosive remnants of war and has been operating in Northern Province of Sri Lanka since 2002, currently working in Jaffna, Killinochchi and Mullaitivu and has a support office in Colombo.

**01. Logistic/Finance Assistant – Jaffna**

Qualifications / Minimum requirements:

- Two years of work experience in a similar role
- Good spoken and written English
- Good computer skills including MS Office (in particular strong command of Excel and Word)
- Good organizational and management skills
- Experience in database management
- Have a valid driving license
- Previous experience with an international institution or NGO is an advantage

**02. Administrative Assistant – Kilinochchi**

Qualifications / Minimum requirements:

- Two years of work experience in a similar role
- Good spoken and written English
- Good computer skills including MS Office (in particular strong command of Excel and Word)
- Good organizational and management skills
- Experience in database management
- Previous experience with an international institution or NGO is an advantage

Interested candidates should submit their applications with Curriculum Vitae and Cover letter explaining your suitability for the position to the below address on or before 17th December 2020.

**The HALO Trust**
**450, Thirunagar west**
**Kilinochchi**
or
E-mail to: **hr@halosrilanka.org**

# இந்தியாவுக்கு களவாக செல்லமுயன்றவர் கைது

பருத்தித்துறை கடற்பரப்பின் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை அழைத்துச்செல்ல முயன்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

திருகோணமலை கிளிகுஞ்சுமலை கிண்ணியாவைச் சேர்ந்த துரைராஜா ராஜலக்ஸ்மன் (வயது 37) என்பவரே இந்தியாவுக்குச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், இந்தியாவிலுள்ள மனைவி, பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்து, பருத்தித்துறையைச் சேர்ந்தவரிடம் பணத்தைக் கொடுத்து செல்ல முயன்றுள்ளார் என்று தெரிய வந்துள்ளது.

அதேவேளை கைது செய்யப்பட்ட நபரின் மனைவி மற்றும் பிள்ளைகள் 2016ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சந்தேகநபர் முன்னிலையாகவில்லை. அதனால் இவர் தப்பிச் செல்வதற்கு முயன்றாரா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஓ.20.26)

## விழிநீர் சொரிய எமது அஞ்சலிகள்



சைவ பரிபாலனசபையின் தலைவராக, செயலாளராக, சமய பிரசாரகராக எனப் பல வகிபாகங்களை வகித்து சபையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உறுதுணையாக பணியாற்றிய

**அமரர் சைவப்புலவர் முத்துகுமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை**

இறைபதம் சென்றமையை அறிந்து துயரடைகின்றோம். அன்னாரது பிரிவால் வாடுகின்ற குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்திபெற தில்லை நடராஜனை பிரார்த்திக்கின்றோம்.

**சைவபரிபாலன சபைக் குடும்பம்**

## குருக்கள் தேவை

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூசைகளை ஆற்றுவதற்கு பிராமண குலத்தைச் சேர்ந்த குருக்கள் தேவை.

விண்ணப்ப முடிவுதிகதி: 20.12.2020

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
தலைவர்/ செயலாளர்
பரிபாலனசபை,
மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நந்தாவில் கொக்குவில்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியை
**திருமதி சிவகலை ஜெயசங்கர்** அவர்களின் பாசமிகு தந்தையாரும்
எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஆகிய
**முத்துகுமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை**
அவர்கள் 10.12.2020 அன்று காலமாகிவிட்டார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**

## மரண அறிவித்தல்



| புவியில் | விண்ணில் |
|---|---|
| 18.08.1943 | 10.12.2020 |

### திருமதி விஜயலட்சுமி செல்வரத்தினம்

யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கு, கொங்கமையை பிறப்பிடமாகவும் GPS விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி செல்வரத்தினம் அவர்கள் நேற்று (10.12.2020) இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் செல்வரத்தினம் (J.P) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லாச்சி தம்பதியரின் கடைசி மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சந்துருச்செல்வன் மற்றும் சந்துருச்செல்வி, தயானந்தன் (ஜெயப்பிரியா நகைமாடம், யாழ்ப்பாணம்), தயாநிதி (ஆசிரியை, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), அனுஷியா (முகாமையாளர், கிராமிய வங்கி, உரும்பிராய்), கயல்விழி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாநகர சபை, யாழ்ப்பாணம்), அருணா (கனடா), சுவர்ணா (குடும்பநல உத்தியோகத்தர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வதனமதி (கனடா), புவனேந்திரராசா, ஜெயப்பிரியா, திலகேசன் (இ.போ.சபை, கோண்டாவில்), விஜயகுமார் (வியாபாரம்), சிவகுமார் (சமுர்த்தி உத்தியோகத்தர், கோப்பாய்), எழில்தாஸ் (கனடா), டினேஸ்குமார் (தீபன் - பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான கோடீஸ்வரி, மனோன்மணி, பராசக்தி, தம்பிராசா, சுந்தரலிங்கம், கமலாம்பிகை மற்றும் அருணாசலம் ஆகியோரின் அன்புத் தங்கையும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரன், யோகநாதன், நவரத்தினம் மற்றும் கனகலிங்கம், கெங்கநாதன், கெங்காதேவி ஆகியோரின் மைத்துனியும் சுங்கமிதா, ஹரிஸ், ஜீவிதன் (கனடா), கம்லேஸ், துவாரகன், கேதாரா, திருவேரகன், ஹரிசாயனி, திருவரங்கன், திருத்தணிகன், அஜந்தன், லோஜனன், ராகுலன், பிரகஷ்வினி, மிதுர்னஜா, எழிலினி, நிலக்ஷன், நிலக்ஷி, அருணன், வருஷ்ணி, வர்நிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.12.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

GPS விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு,
077 1949 960, 077 923 7820

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31.01.1938 | 09.12.2020 |

### கணேசன் கமலாம்பிகை
### (முன்னாள் நெசவு ஆசிரியை)

புங்குடுதீவு-12 ஐ பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் கமலாம்பிகை அவர்கள் 09.12.2020 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசன் அவர்களின் பாசமிகு மனைவியும், லலிதாம்பிகை (கனடா) மங்கயற்கரசி (அவுஸ்திரேலியா), கலைச்செல்வி (ஆசிரியை, ஊர்காவற்துறை றோ.க.த.ஆ. பாடசாலை), கமலநேசன் (சுவிஸ்), குகப்பிரியா (சுவிஸ்), தவநேசன் (கொழும்பு), காலஞ்சென்ற இலங்கநேசன் மற்றும் சிவநேசன் (கனடா) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி (ஆசிரியை), யோகாம்பிகை மற்றும் பாக்கியலட்சுமி, பேரின்பநாதன் (டாக்டர்), காலஞ்சென்ற ராஜராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், சிவசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி, விக்கினேஸ்வரன் (நாரந்தனை), லோகநந்தினி (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்), மஞ்சுளா (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்துறை.

தகவல்:
குடும்பத்தினர்,
077 65 [illegible] 8769

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### செவிடன் காதில்...

லுக்குச் செல்லத் தீர்மானித்துள்ளோம் என்று முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்தனர்.

பல தரப்பினரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அதையடுத்தே இந்த முடிவை எடுத்துள்ளோம் என்றும், இன்று காலை கடலுக்குச் செல்லவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அண்மைய நாள்களாக நடக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று முல்லைத்தீவு, கள்ளப்பாட்டில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உட்பட பலர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்சியாக நடக்கும் இந்திய மீனவர்கள் அத்துமீறல்கள் தொடர்பில் அதில் பேசப்பட்டது. மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மீனவர்கள் கடுமையாகக் குற்றஞ்சாட்டினர். பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதும், காத்திரமான எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கரையோரத்தில் நிலைகொண்டுள்ள கடற்படையினர், இந்திய மீனவர்களின் வருகையை அவதானிக்கின்றபோதும், எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

பல தரப்புகளிடம் சுட்டிக்காட்டிய போதும் பயன் இல்லாததால் இன்று தாங்களே கடலுக்குச் சென்று இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் இறங்கவுள்ளோம் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். (எ-246)

### தந்தை குணமடைய...

இரு மகன்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பனவற்றில் நேற்று 380 பேருக்கு கொவிட் 19 பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அந்த முடிவுகளில் மகன்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அந்தக் குடும்பத்தில் தாயாருக்கும் கொரோனாத் தொற்று முன்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவரும் சிகிச்சையில் உள்ளார் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார். (து)

### கொரோனா....

தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதையடுத்து நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 146 ஆக உயர்ந்துள்ளது. 54 மற்றும் 66 வயதுடைய பெண்கள் இருவரே உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்று மட்டும் 469 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த ஜனவரி மாதம் முதல் இப்போதுவரை 30 ஆயிரத்து 613 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 22 ஆயிரத்து 261 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். 8 ஆயிரத்து 206 பேர் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், 146 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். (எ-22)

### மூக்குடைந்த...

கொண்ட போராட்டத்தை தடுத்து நிறுத்த பொலிஸார் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் மாவட்டம் முழுவதும் இருந்து வந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பு நகரில் தந்தை செல்வா பூங்காவில் ஒன்றுகூடிய போது, அவர்களை பொலிஸாரும் புலனாய்வாளர்களும் எச்சரித்து பஸ் நிலைய பக்கம் விரட்டினார்கள். பஸ் நிலையத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றுகூடிய போது, அனுமதி எடுக்காது போராட்டம் நடத்தினால் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவீர்கள் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை அச்சுறுத்தினர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பெண்மணி 'நீங்கள் கைது செய்தாலும் பரவாயில்லை நாங்கள் போராட்டத்தை நடாத்துவோம். அரசியல்வாதிகளுக்கு ஒரு சட்டம் எங்களுக்கு ஒரு சட்டமா_நீங்கள் என்ன வேண்டும் என்றாலும் செய்யுங்கள்' என்று கூறினார்.

பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அனுமதி பெற்றே போராட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும், இல்லையென்றால் 14 நாள்கள் அனைவரையும் தனிமைப்படுத்துவோம் என அச்சுறுத்திய நிலையில் காணாமல் போன உறவினர்களுக்கும், பொலிஸார் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் ஆகியோர் மக்களை மீண்டும் தந்தை செல்வா பூங்காவில் ஒன்று சேர்த்தனர். அனுமதியின்றி மக்களை கூட்ட முடியாதென அவர்களிடமும் பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது மீண்டும் தர்க்கம் உருவானது.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து பிள்ளையான் விடுவிக்கப்பட்டு பேரணியாக வந்தபோது பொலிஸாருக்கு தெரியவில்லையா, அந்த கூட்டத்தை விட இது சிறிய கூட்டம் என சுட்டிக்காட்டியதையடுத்து பொலிஸார் மௌனமாயினர். தமக்கு பிரச்சனையில்லை, பொதுச்சுகாதார பரிசோதகரின் அனுமதி பெற்று போராட்டத்தை நடத்துங்கள் என்றார்கள்.

உடனடியாக சம்பவ இடத்திலிருந்தபடியே ஞா.சிறிநேசன், பொதுச்சுகாதாரப் பரிசோதகரை தொலைபேசியில் அழைத்து பேசினார். தாம் போராட்டத்துக்கு தடைவிதிக்கவில்லையென்றும், சமூக இடைவெளி பேணி போராட்டத்தை நடத்தலாமென்றும் கூறினார். இதையடுத்து, தந்தை செல்வா பூங்காவில் போராட்டம் நடைபெற்றது. (ஒ.இ)

## யானையின் சடலம் மீட்பு!

கொழும்பு. டிசெ.11

நவகத்தேகம புளுபிட்டிய ஏரியில் யானையொன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பிரதேசவாசிகள் வழங்கிய தகவல்களையடுத்தே அந்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னரே உயிரிழந்திருக் கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்தக் காட்டு யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை. (ந-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 04 . 1938



இறப்பு 10 . 12 . 2020

### சின்னையா சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், PWD மட்டக்களப்பு)

வடக்கு அராலியை பிறப்பிடமாகவும் கல்லடி மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவலிங்கம் நேற்று (10.12.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சின்னையா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், ரூபராணியின் பாசமிகு கணவரும், சிவரூபி, சிவேந்திரன், தேவரூபி, சத்திஜேந்திரன், கனேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2020) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரங்கநாதன், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1947



மறைவு 10 . 12 . 2020

### சுப்பிரமணியம் அருள்நாதன்

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருள்நாதன் அவர்கள் நேற்று (10.12.2020) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், கந்தையா நாகம்மாவின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்சினி, தர்மினி, பிறேமலதா (பிரான்ஸ்), காயத்திரி (யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியை), அஜந்தன், அனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா (கொழும்பு), சிவசோதி, காலஞ்சென்ற முருகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுந்திரன் (அப்புகடை), விக்கினேஸ்வரன் (கரன் பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) தயானந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீதன், கீர்த்தனா, கீர்த்திகா, குணாளன், கிஷாந், ரக்ஸனா, பரத், தனிகா, நிதீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2020) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் பயிரிக்கூடல் காரைநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

T.P:077 5690 122

# வெள்ளம் ஒரு படிப்பினையே! இனி உணர்ந்து செயற்படுவோம்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைகளை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொண்டு, இனி வரும் காலங்களில் வெள்ளப் பாதிப்பு வராத அளகவுக்கு நாம் செயற்பட வேண்டும் என மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமைகள் தற்போது குறைவடைந்து வருகின்றன. குறுகிய காலத்தில் ஏற்பட்ட மழையால் பாரிய வெள்ள நிலைமைகள் ஏற்பட்டமைக்கு காரணம், கடலின் நீர் மட்டம் உயர்வு, குறுகிய காலத்தில் அதிகளவு மழை வீழ்ச்சி, நீர் ஓடும் வடிகான்கள் சீரின்மை என்பன ஆகும். இதனால் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்புக்கள் அதிகமாகக் காணப்பட்டன. ஆகவே இந்த வடிகான்களைச் சரியான முறையில் நிர்வகிக்கும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். உலக வங்கியின் மூலோபாயத் திட்டத்தின் கீழ் இந்த வடிகான்கள் சீரமைக்கப்படும். ஆகவே அதற்கான சரியான வழிகாட்டல் பெறுவதற்கு எண்ணியுள்ளோம். மழை வெள்ளம் தேங்கியுள்ளபோது வெள்ளம் ஓடவில்லை, வடிகான்களை மூடி வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன, அல்லது கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்ற முறைப்பாடுகளே எமக்கு கிடைத்துள்ளன. ஆகவே இதற்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதற்கு எண்ணியுள்ளோம் - என்றார். (ப-7)

## கடமைக்கு இடையூறு ; இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.11

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இருவரையும் வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்திறை நீதவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார். கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்ட இருவரை வழிமறித்த நெல்லியடி பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், அனுமதிப்பத்திரத்தை காண்பிக்குமாறு கேட்டுள்ளார். அதன்போது அவர்கள் இருவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதருடன் முரண்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோ தகரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு தொடர்பில் குடிதண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்ட இருவரையும் விசாரணைக்கு அழைத்த பொலி ஸார், அவர்களைக் கைது செய்துள் ளனர். பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளை வித்த குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் இருவரும் நேற்று நீதிவான் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டனர். சுகாதார பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவரை தாக்க முற்பட்டமை போன்ற குற்றச்சாட்டில் பொலிஸார் அவர்களை மன்றில் முற்படுத்தினர். இருதரப்பு விளக்கங்களையும் கேட்ட நீதிபதி அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (126)

## சைவப்புலவர் சங்க தலைவர் காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ.11

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை காலமானார்.

திருஞானசம்பந்தபிள்ளை சைவசித்தாந்தப் புலமையும், தமிழ்ப்புலமையும், ஆங்கிலப்புலமையும் கொண்டவரும் இந்திய சைவசித்தாந்த சமாஜத்தின் சைவப்புலவர் தேர்வில் தங்கப்பதக்கம் பெற்ற பெருமையுடையவரும் ஆவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கையின் வருகை விரியுரையாளரும், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நீண்டக்காலமாக தலைவராக நின்று சைவப்பணியாற்றிய சங்கத்தின் தலைவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்துக்குமாரசாமி திருஞான சம்பந்தப்பிள்ளையின் ஆன்மா பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவடிகளில் அடைய பிரார்த்திக்கின்றோம் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலர் சைவப்புலவர் செ.த.குமரன் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார். (ஐ)

## தெல்லிப்பழை, கோப்பாயில் அதிகளவான பயிர்கள் அழிவு

யாழ்பபாணம்,டிசெ.11

யாழ்ப்பாண மாவட்டத்தில் புரேவி புயல் மற்றும் மழையால் தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேசங்களில் அதிகளவான பயிர்கள் அழிவடைந்துள்ளன என மாவட்டச் செயலக விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.

நெல், மிளகாய், வாழை, மரவள்ளி மற்றும் பப்பாசி செய்கைகள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது வரை கிடைக்கப் பெற்ற தரவுகளின்படி நெற்செய்கை வயல்களில் வெள்ளம் தேங்கி நின்று வடிவதற்கு காலம் எடுப்பதால் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக விடத்தல்பளை, உசன் ஆகிய பிரதேசங்களில் அதிக நெற் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேசங்களில் வாழை செய்கையும்,கரவெட்டி மற்றும் தெல்லிப்பழையில் மரவள்ளி செய்கையும்,சாகவச்சேரி மற்றும் கோப்பாய் பிரதேசங்களில் மிளகாய் செய்கையும்,தெல்லிப்பழை மற்றும் கோப்பாயில் பப்பாசி செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது 141 ஆவது குருபூசை தினம் வவுனியாவில் அண்மையில் நடைபெற்றது.(ஐ)

## வீதியை மூடி 3அடி வெள்ளம்; பயணிப்பதில் மக்கள் சிரமம்

சாவகச்சேரி, டிசெ.11

ஏ-9 வீதியின் கைதடி பாலத்துக்கு அண்மையிலிருந்து ஏ42 வீதியுடன் இணைக்கும் வீதியில் மூன்று அடி வெள்ளம் காணப்படுவதால் தச்சன்தோப்பு மற்றும் மறவன்புலவு, நாவற்குழி போன்ற இடங்களைச் சேர்ந்த மாணவர்கள், அரச அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் சிரமங்களுடன் பயணிப்பதாக தெரிவித்தனர்.

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி போன்ற இடங்களுக்கு சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பதற்கு குறைந்த தூரம் என்பதால் இந்தப் பாதையை பயன்படுத்தி வந்தனர்.

வீதியின் இருபுறமும் வயல்கள் காணப்படுகிறன. இவ் வயல்கள் மழை வெள்ளத்தால், நிறைந்து வீதியை மூடியதால் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். தனங்களப்பு சாவகச்சேரி வீதியிலும் வெள்ளம் காணப்படுவதால் நாவற்குழி சென்று அங்கிருந்து பயணங்களை மேற்கொள்கின்றோம் என தெரிவித்தனர். (ஐ-9)



## விளையாட்டு மைதான சீரமைப்பு ஆரம்பம்

முல்லைத்தீவு, டிசெ.11

புதுக்குடியிருப்பு-தேவிபுரம் புதியகுடியிருப்பு கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்துக்கான சீரமைப்பு பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புலம்பெயர் தமிழரான தாயக விருட்சம் அறக்கட்டளையின் செயற்பாட்டாளரான ஜீவராசாவின் நிதிப் பங்களிப்பாக 30 ஆயிரம் ரூபா நிதி வழங்கி அந்தச் சீரமைப்பு பணி ஆரம்பிக்கப்பட்டது. இவ் விளையாட்டு மைதானத்துக்கான மின் ஒளியூட்டல் உட்பட ஏனைய சீரமைப்புப் பணிகளும் மிகவிரைவில் நடைபெறும் என்றும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க தாயக விருட்சம் அறக்கட்டளை தொடர்ந்தும் பயனிக்கும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்

ஆரம்ப நிகழ்வில் தாயக விருட்சம் சார்பாக தாய்த் தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ரூபனால் சமூக செயற்பாட்டாளர் த.யோகேஸ்வரன் மற்றும் விளையாட்டுக் கழக வீரர்களிடம் நிதி கையளிக்கப்பட்டது. (ப-222)

## மொட்டுவின் பிரபலம் சஜித்துடன் சங்கமம்!



கொழும்பு, டிசெ. 11

இவ்வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிட்ட ஜனக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று மாலை சந்தித்து அவர் தனது ஆதரவை அறிவித்தார். இவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தனிப்பட்ட செயலாளராகச் செயலாற்றியிருந்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அவர் கோட்டை நகர பிதாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி))
## பொது அறிவித்தல் - 2021

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையி னால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2021**
சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2021 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2021.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2021**
1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவாதி திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**3) ஆதன வரி செலுத்துதல் - 2021**
எமது சபைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் 2021.03.31 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். 2021.03.31 ஆம் திகதிக்கு முன் வரி செலுத்த தவறின் 15% தண்டமும் வரியும் அறவிடப்படும்.

**4) கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல், திருத்துதல் கட்டணங்கள் அறவிடல் - 2021**

i) வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், கிணறுகள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், கட்டிடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டிடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டிட அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் -2021**
2021 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2021.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**6) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**
சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள்/ நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**7) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**
சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழுங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும்.

**8) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**
வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 500m தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**9) படவரைஞுரைப்பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2021**
2021 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2021.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும் அல்லது புதுப்பித்துக்கொள்ளவும்.

**10) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**
சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிகட்டணத்தை செலுத்தினால் கழிவுகள் அகற்றப்படும் என்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**11) பொது சுகாதாரம் பேணல்**
சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**12) இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும்.**
இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை உரிய உப அலுவலகத்திலும் சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் உரிய உப அலுவலகத்துக்குரிய பொது நூலகத்திலும் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக மேற்குறித்த இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**13) வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக**
சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்கு கின்ற தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

**பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகள்**

**1) குடிநீர் வழங்கல் சேவை**
எமது பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் 1 லீற்ரர் ரூபா 1.00 என்ற கட்டண அடிப்படையிலும் வேறுவகையான பயன்பாட்டிற்கு 1 லீற்றர் ரூபா 2.00 என்ற கட்டண அடிப்படையிலும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**2)கனரக வாகன சேவைகள்**
மோட்டக்கிரேன்ரர், பக்கோ, கலிபௌசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**11.12.2020**

## மரண அறிவித்தல்



மலர்வு 23 . 03 . 1948 — உதிர்வு 10 . 12 . 2020

### திருமதி சரோஜினிதேவி கந்தசாமி (செல்லம்)

மண்கும்பானை பிறப்பிடமாகவும் இலக்கம் 10, கன்னாதிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி கந்தசாமி நேற்று (10.12.2020) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லநாதசிவம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவாஜினி மற்றும் கேசவன், பரந்தாமன், சுபாஜினி, கமலாஜினி (அமுதா - லண்டன்), கஜநிதி (முகுந்தா - லண்டன்), கதிர்வேல் (கோபி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தயாபரன் மற்றும் காயத்திரி, கலைவாணி துரைநேசன், விஜயராசா (லண்டன்), மகேந்திரன் (லண்டன்), வைஸ்ணவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீஸ் (தயா), பிரதாப் பிரணிகா, ரிஷிகேசிகா, மகிஜா, ஜகிசன், ஜெனார்த்தனன் ஜனுஷன், கபீஸ், ஜெபின், லக்ஷ்சனா, அன்சிகன், அக்ஷயா, மதுனிகாவின் அன்புப் பேர்த்தியும், துஜீபனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி, வெள்ளக்கடற்கரை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**மூத்த பேரப்பிள்ளைகள்**
**077 032 8362**

## மரண அறிவித்தல்



தோற்றம் . 18 . 01 . 1930 — மறைவு . 10 . 12 . 2020

### பொன்னம்பலம் இராசரத்தினம்

**(ஓய்வுபெற்ற லிகிதர்-பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்)**

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம்-இராசரத்தினம் நேற்று (10.12.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (சட்டம்பியார்) அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரவாகு-சின்னாச்சிப்பிள்ளை (மூளாய்) தம்பதியரின் அன்பு மருமகனும், சிதம்பரேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன் (சுவிஸ்), காலஞ்சென்ற விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சுளாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், துவாரகன் (சுவிஸ்), வந்தனா (சுவிஸ்), இலக்கியன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் துரைசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற கனகேஸ்வரி (யோகம்) மற்றும் கமலாதேவி அவர்களின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, திலகவதியார், மீனாட்சிப்பிள்ளை, கனகசபாபதி (இளைப்பாறிய அதிபர்), பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்) மற்றும் மகாலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற கனகாம்பிகை (கொழும்பு) காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

**மகன்-தயாபரன் 0041787795000**
**மனைவி-சிதம்பரேஸ்வரி 021 224 3157**

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 07, முத்துமாரியம்மன் கோவில் வீதி. 10/2என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்னும் பெயரிலும் உரிமைகோருபவர் பெயர்:- S.சண்முகநாதன் என்னும் பெயரிலும் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு சின்னையாவும் பெண் நல்லம்மாவும் பிரசித்த நொத்தாரிசு சி.பொ.மயில்வாகனன் முகதாவில் 28.11.1983 ஆம் திகதியிடப்பட்ட 5264 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிமூலம் அவ்வூர் சின்னையா சண்முகநாதன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர், கல்லடிமூட்டு ஒழுங்கை. சாவகச்சேரி சண்முகநாதன் மகள் தேனுஜா பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 24.08.2020 ஆம் திகதியிடப்பட்ட 5784 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் பிதா காலஞ்சென்ற பின்னர் ஏகவாரிசான எனது சொந்தமும் பிதாவழி முதுசமும் என வெளிப்படுத்தி இல 5. கற்குளிவீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த விசுவலிங்கம் சண்முகம் சிவசுப்பிர மணியத்துக்கும் பெண் சிவமோகனாவுக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை "அரசொடுபுளிகிணற்றடிவளவு" நிலப்பரப்பு 2 (இரண்டு) குளி 9 (ஒன்பது). இதற்கு எல்லை

கிழக்கு : ஒழுங்கை
வடக்கு : செல்வநாதன் பெண் வித்தியாவின் ஆதனம்
மேற்கு : கணேசு பெண் சிவதுர்க்காவின் ஆதனம்
தெற்கு : லம்போதரன் பெண் யோகேஸ்வரியின் ஆதனம்.
இவ்வெல்லை நிலம் பயிர்கள் அடங்கலும்.

தற்போது விசுவலிங்கம் சண்முகம் சிவசுப்பிரமணியமும் பெண் சிவமோகனாவும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ, தபாலிலோ சட்ட பூர்வ ஆவணங்களுடன் எழுத்துமூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சிமன்றம் சாவகச்சேரி.**

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2021 ஆம் ஆண்டுக்கான
## மீள்கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தை, இறைச்சிக் கடைகளை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதிவரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.**

01. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் 11.12.2020 - 23.12.2020ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 –பி.ப03.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் **தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும்** கொண்டுவருதல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி:- **24.12.2020 ஆம் திகதிவியாழக்கிழமை காலை 10.00மணி**
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- **24.12.2020 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30மணி**

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 24.12.2020 **முற்பகல் 10.00**மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது இதன் இணைப் பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பரிபூரண அதிகாரமுண்டு.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2021 ஆம் ஆண்டு பொதுச்சந்தை, இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகைவிபரம் (01.01.2021–31.12.2021) | ஆகக்குறைந்தகேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம்(மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதரவரிகள் தவிர) (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மரக்கறிச் சந்தை, மீன்சந்தை, வாகன தரிப்பிடம் உள்ளடங்கலாக) | **9,000,000.00** | **90,000.00** | **1,000.00** |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | **270,900.00** | **3,000.00** | **1,000.00** |
| 04 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | **1,575,900.00** | **16,000.00** | **1,000.00** |

**குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக் கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.**

நகராட்சி மன்றம்
திருமதி சிவமங்கை இராமநாதன்,
சாவகச்சேரி தவிசாளர்,
11.12.2020
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.


பிரபல்யமான
நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும்
**வேலையாள்கள் தேவை**

- **வாகன சாரதி** I (Driver) (மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. வயது எல்லை 23- 35)
- **கணக்காளர்** (Accountant) (பெண்) (யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)
- **காசாளர்** (Cashier) (யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)
- **வாகன சாரதி** II(Driver) (புத்தூர், ஆவரங்கால், சிறுப்பிட்டி, அச்சுவேலி பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
- **காசுசேகரிப்பாளர்** (Cash Collector) (புத்தூர், ஆவரங்கால், பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: **077 008 3000**


## கஞ்சா மீட்பு: ஒருவர் கைது

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மூங்கிலாறில் ஒன்றரைகிலோ கஞ்சா மீட்கப்பட்டதோடு, அதை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சுதந்திரபுரம் கொலனியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் தப்பியோடிவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-19)

# துயர் பகிர்கின்றோம்



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர்

திருமதி **அனுசியாதேவி சற்குணசிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மகேஸ்வரி சபாநாயகம்**
(வயது 87) அவர்கள் 02-12-2020 அன்று லண்டனில் காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08-12-2020 அன்று லண்டனில் நடைபெற்றது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்.

**வட இந்து மகளிர் கல்லூரியின்**
**பழைய மாணவர் சங்கம் [OGA]**
**பருத்தித்துறை கிளை.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
29 . 12 . 1959



உதிர்வு
10 . 11 . 2020


அமரர் **ஜோதிக்குமார்**
**சிவகெங்கை (கெங்கா)**

குவலயத்தில் ஒளிர்ந்த குலவிளக்கே!
வீசிவிட்ட விதிப்புயலில் அணைந்தாலும்...
விண்ணுலகில் பேரொளியாய் விளங்கிடுவாய்....
ஊசலிடும் உன் நினைவுகளை உள்நிறுத்தி
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

34/2, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

கணவர் - ஜோதிக்குமார் (USA)
சகோதரி - கமலாம்பிகை (நல்லூர்)
சகோதரன் - ஜோதிராசா (பெல்ஜியம்)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 . 06 . 1954 | 09 . 12 . 2020 |

### இளையதம்பி மகாதேவன்
### ( ஜதாஸ் ஹொட்டல் உரிமையாளர் ) மாம்பழம்

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மகாதேவன் ( ஜதாஸ் ஹொட்டல் உரிமையாளர்) மாம்பழம் 09.12.2020 அன்று காலமானார்.


அன்னார் இளையதம்பி சரஸ்வதியின் அன்பு மகனும், சுப்பிரமணியம் இராஜேஸ்வரியின் அன்பு மருமகனும் மஞ்சுளாவின் அன்புக் கணவரும், மருதாளினி (கனடா), மயூரதாஸ், ஜதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, செல்லத்தம்பி, விஜயரத்தினம், தவமணிதேவி, வண்ணக்கிளி, பத்மாவதி, அன்னலட்சுமி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜகுலநாயகி (அவுஸ்திரேலியா), தெய்வநாயகி (வவுனியா), சுகுமார் (லண்டன்), வசந்தராணி (லண்டன்), உதயகுமார் (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-12-2020 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 12 . 1938 | 10 . 12 . 2020 |

### சைவப்புலவர் கலைஞானச்சுடர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சைவப் புலவர் கலைஞானச்சுடர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர், யா/இந்து ஆரம்ப பாடசாலை, யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, யா/ இணுவில் மத்திய கல்லூரி, தலைவர்-அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்) நேற்று (10.12.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி -காமாட்சியம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - பாலாம்பிகை தம்பதியரின் மருமகனும், சௌந்தராம்பிகையின் அன்புக் கணவரும், ஞானசுந்தரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண கல்வி வலயம்), ஞானசுந்தரி (இலண்டன்), பாலசுந்தரி (ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி), யாமளசுந்தரி (சுவிஸர்லாந்து), சிவகலை (ஆசிரியை, யா/இந்து ஆரம்ப பாடசாலை), கார்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிர்தா, உமாபதிகுமார் (இலண்டன்), மோகனராஜ் (உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி) சத்தியலிங்கம் (சுவிஸர்லாந்து), ஜெயசங்கர், முருகன் (RB Electronics) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி வாலம்பிகை, பஞ்சாட்சரம், காலஞ்சென்ற திருமதி, சிவகாமசுந்தரம், பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிற்சபேசன் (கனடா), வைத்தீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலைவாணி (கனடா), தாமரைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அண்ணனும், சரவணன், தனுசியா, குருபரன், சிவகுமார் (இலண்டன்), சேந்தன், மேனகா, சரண்யா, சயந்தனி, மதுராங்கினி (சுவிஸர்லாந்து), கோபிசன், சோபனா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 10.12.2020 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 3458

# மஞ்சளுடன் 7பேர் கைது

சிலாபம், டிசெ.11

சிலாபம் பகுதியில் ஆயிரத்து 110 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் தொகையுடன் ஏழு பேர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் புலனாய்வுப் பிரிவின ருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப் பட்ட சுற்றி வளைப் பின்போதே சந்



தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மஞ்சள் 77 இலட்சம் ரூபா வரை பெறுமதியானவை என பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-இ)


## விற்பனைக்கு

- சிமெந்து கலவை இயந்திரம்
- சிமெந்து கலவை தூக்கி (Hoist)
- அலுமினிய Bar வகைகள்
- மரக்கதிரைகள்
- ஸ்ரீல் மேசைகள்
- மரக்கதவுகள், ஜன்னல்கள்
- மெத்தை விரிப்பு
- அலுவலக கண்ணாடி மேசை (Executive Table)
- பிளாஸ்ரிக் மேசைகள், கதிரைகள், ஸ்ரூல்

076 3172383, 077 711 0287

## விற்பனைக்கு

யாழ். கந்தர்மடம் சந்திக்கு அருகில் 3 பரப்புக் காணியும், யாழ். நாவலர் வீதியில் 2½ பரப்புக் காணியும், 2½ பரப்பில் அமைந்த காணியும், வீடும், யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் 10 பரப்புக்காணியும் வீடும், யாழ். பிறவுண் வீதியில் 2½ பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 723 2535

## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 3 கடைகளும், மாநகர சபை கட்டடத்திற்த முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் தனி கடை ஒன்றும், யாழ். கே.கே. எஸ். வீதியில் தனிக் கடை ஒன்றும், கோப்பாய் கைதடி வீதியல் 48 பரப்புக் காணியும், யாழ். திருநெல்வேலி கலா சாலை வீதியில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 723 2535

## வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் 1 ஆம் மாடி கட்டடம் வாடகைக்குண்டு. கடைகள் அலுவலகங்களுக்கு ஏற்றது.

077 828 1956

## வேலையாட்கள் தேவை

கடையில் வேலை செய்யக் கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. (இருபாலாரும் விரும்பத்தக்கது)

தொடர்பு: 076 1966 600

## குத்தகைக்கு காணி தேவை

கைதடி சாவகச்சேரி, கொடிகாமம், பளை மிருசுவில் போன்ற இடங்களில் 3 அல்லது 4 ஏக்கர் காணி குத்தகைக்கு தேவை. Jay Green (Pvt) Ltd.

070 222 222 3

## சமையல் ஆள் தேவை

தனிநபர் ஒருவருக்கு தினமும் 3 வேளை வந்து சமைத்து கொடுக்கக் கூடிய சமையல் ஆள் தேவை.

தொடர்பு:
077 959 2628

## Walk in Interview for Project Coordinator

We are an Industrial Chamber and we are seeking for a dynamic, enthusiastic and dedicated ***male*** individual to strengthen our team as a Project Coordinator (immediate vacancy).

**The ideal candidate should fulfil following prerequisites**

- Minimum two to three years of working experience in the field of business development activities of micro, small and medium enterprises.
- Should be able to work with minimum supervision
- Having computer literacy
- Individuals reside close to Jaffna is preferred.
- Communication skill with English knowledge is preferred
- Keeping records and prepare relevant reports in English are essential
- Age limit between 25 – 50
- Frequent field visits within Northern Province are essential.

The selected candidate will be offered an attractive remuneration package based on experience and qualifications.

If you feel you are the right candidate, please forward your resume mentioning the post applied for in the subject line **on or before 13th of December 2020** to *jaffnacciy@gmail.com* *or* you can directly attend the **interview on 14th of December 2020 from 11:00am to 1:00pm and 3:30pm to 5:00pm**

### செலான் வங்கி யாழ்ப்பாணக் கிளை சிறுவர்களை மகிழ்விக்கும் முகமாக போட்டி ஒன்றினை நடாத்தி பரிசில்களை வழங்கவுள்ளது




போட்டித் தலைப்பு - "வாழ்த்துமடல் தயாரித்தல்"

**போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியானவர்கள்**

செலான் வங்கியில் டிக்கிரி சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் சிறுவர்கள் மற்றும் டிக்கிரி சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்காத சிறுவர்களும் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

**போட்டிக்கான விதிமுறைகளும் வயது எல்லையும்**

பழுதடையாத கழிவுப் பொருட்களைக் கொண்டு வாழ்த்துமடல் தயாரித்தல்.

பிரிவு I - 5 வயதிற்கு உட்பட்டவர்கள்
பிரிவு II - 6 வயது தொடக்கம் 8 வயது வரை
பிரிவு III - 9 வயது தொடக்கம் 10 வயது வரை

**ஒவ்வொரு பிரிவுக்குமான பரிசு விபரம்**

1ம் பரிசு - ரூபா. 10,000/- பெறுமதிமிக்க பரிசில்கள்
2ம் பரிசு - ரூபா. 7,500/- பெறுமதிமிக்க பரிசில்கள்
3ம் பரிசு - ரூபா. 5,000/- பெறுமதிமிக்க பரிசில்கள்

மேலும் ஒவ்வொரு பிரிவுகளிற்கும் 10 ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.

செலான் வங்கி

## நிறைவேறியது...

2021 ஆம் நிதியாண்டுக்கான பாதீடு கடந்த 17 ஆம் திகதி நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. மறுநாள் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை விவாதம் நடத்தப்பட்டு, இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் (மூன்றாம் வாசிப்பு) ஆரம்பமானது. நேற்று மாலைவரை விவாதம் நடத்தப்பட்டு, மூன்றாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு (இறுதி வாக்கெடுப்பு) நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்களும் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைபுக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.

அதேவேளை, வரவு -செலவுத்திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சபாநாயகரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் இராப்போசன விருந்து வழங்கப்படும். அந்த நிகழ்வை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் புறக்கணித்தனர். பாதீடு நிறைவேற்றப்பட்ட பின்னர் பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர், சபை முதல்வர் ஆகியோர் நன்றியுரை ஆற்றினர். அதன்பின்னர் நாடாளுமன்றம் ஜனவரி 5 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (எ-44)

## பட்ஜெட் விருந்தில்....

நிறைவேற்றப்பட்ட பின்னர், சம்பிரதாய 'பட்ஜெட் தேநீர் விருந்து' சபாநாயகர் இல்லத்தில் நடைபெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் பங்கேற்றுள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீது நேற்று மாலை நடைபெற்ற இறுதி வாக்கெடுப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அதன் பின்னர் சபாநாயகரின் இல்லத்தில் நடைபெற்ற 'பட்ஜெட்' விருந்தில் சம்பந்தன் பங்கேற்றார்.

'பட்ஜட்' விருந்துக்கு கூட்டமைப்புக்கும் அழைப்பு வந்தது. ஆனால், நாம் வாக்கெடுப்பில் பங்கேற்காத காரணத்தால் அதிலும் கலந்துகொள்ளவில்லை. தலைவர் சம்பந்தன் மட்டும் பங்கேற்றார். அது அவரின் தனிப்பட்ட விருப்பம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (எ-22)

## எதிர்த்துப்....

பயனும் தமிழருக்கு இல்லை. அதே வேளை, வாக்கெடுப்பில் அதை எதிர்ப்பதால் எதுவும் நடக்கபோவதும் இல்லை. அதனால்தான் வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போதும், நேற்றைய இறுதி வாக்கெடுப்பின்போதும் நாம் பங்கேற்கவில்லை.

இவ்வாறு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கடந்த நல்லாட்சி அரசின் வரவு - செலவுத் திட்டங்களை வாக்கெடுப்பில் பங்கேற்று ஆதரித்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நேற்று மாலை நடைபெற்ற கோத்தபாய அரசின் கன்னி வரவு செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அதற்கான காரணம் என்ன என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் 'உதயன்' வினவியபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மிக மோசமானது என்பதை அது சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே நாம் ஊடகங்களுக்குத் தெரிவித்து விட்டோம். அதன் பின்னர் சபையில் நடைபெற்ற இரண்டாம்வாசிப்புமீதானவிவாதத்தின்போதும், அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தின் போதும் அதை எதிர்த்து நாம் உரையாற்றினோம். வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதில் நாம் பங்கேற்கவில்லை. வரவு - செலவுத் திட்டம் மீது நேற்று நடைபெற்ற இறுதி வாக்கெடுப்பிலும் நாம் எவரும் பங்கேற்பதில்லை என்று நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுத்தோம்.

கோத்தாபய அரசின் மிக மோசமான வரவு - செலவுத் திட்டத்தால் எந்தப் பயனும் தமிழருக்கு இல்லை. அதே வேளை, அது சபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியே தீரும் என்பதும் எங்களுக்கு ஏற்கனவே தெரியும். இந்தநிலையில், வாக்கெடுப்பில் நாம் பங்கேற்று அதை எதிர்ப்பதால் எதுவும் நடக்கபோவதும் இல்லை. அதனால்தான் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போதும், நேற்றைய இறுதி வாக்கெடுப்பின்போதும் நாம் பங்கேற்கவில்லை என்றனர். (எ-22)

## விக்னேஸ்வரனும்...

கெடுப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனும் பங்கேற்கவில்லை.

நேற்றுச் சபை அமர்வில் காலை முதல் கலந்துகொண்ட அவர், மாலையில் வாக்கெடுப்பு இடம்பெறுவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்னர் சபையை விட்டு வெளியேறினார். வாக்கெடுப்பில் பங்கேற்காமைக்கான காரணத்தை அவர் நேற்றிரவு வரை அறிவிக்கவில்லை. (எ-22)

## முன்னணி....

வாக்கெடுப்பில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே பங்கேற்றது.

அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் பங்கேற்று வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்தனர்.

வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போதும் இவர்கள் இருவரும் எதிர்த்து வாக்களித்திருந்தனர். (எ-22)

## மனித உரிமைகள்...

கள், இடையூறுகளைத் தாண்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் முடிவில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் மனுக்கள் ஐ.நாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அலுவலகத்தின் முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில், மனித உரிமைகள் நாளில் உரிமைகள் மறுக்கப்பட்டு வீதியில் நாம், குற்றம் செய்பவர்களுக்கு யாரும் உடந்தையாக இருக்காதீர்கள், கோத்தா அரசே நீ கொண்டுபோனவர்கள் எங்கே?, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கிய வாறும், 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்' என்று பல கோசங்களை எழுப்பியவாறும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு போராட்டத்தின் இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் ஆணையாளருக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் பேரணி இடம்பெற்றது. காலை 10.30 மணியளவில் மன்னார் டெகொம் சந்தியில் ஆரம்பமாகி மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஊடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது. தொடர்ந்து மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்துக்கு முன் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப் படங்கள் மற்றும் பதாதைகளை ஏந்திய வாறு அமைதியான முறையில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'மறைக்கப்பட்ட மனிதர்கள் எங்கே'?, இராணுவத்திடம் ஒப்டைக்கப்பட்ட உறவுகள் எங்கே உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியாவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**கிளிநொச்சி**

போரில் இறந்தவர்களுக்கு விளக்கேற்றக் கூட அனுமதி இல்லை என்றால் இங்கு எவ்வாறான மனித உரிமை மீறல் நடந்திருக்கும் என்பதை இலகுவாக கண்டறியலாம் என்று தெரிவித்து வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு போராட்டத்தில் ஈடுபட்டது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இடம் பெற்ற போராட்டத்தின் போது இவ்வாறு குறிப்பிட்டனர்.

**யாழ்ப்பாணம்**

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ்.நாவலர் வீதியில் உள்ள ஐ.நா அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை போராட்டம் நடைபெற்றது. ஐ.நாவுக்கான மனு ஒன்றையும் கையளித்தனர். போராட்டத்தின்போது கதறி அழுத காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு உண்மைகளை வெளிப்படுத்துங்கள் எனவும், உண்மைகளை கண்டறிந்து சொல்லாவிட்டால் நாங்களே தற்கொலை செய்வோம். இல்லையென்றால் எங்கள் மீது குண்டுகளை போட்டு கொலை செய்துவிடுங்கள் என்று கதறி அழுதனர்.

**வவுனியா**

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக காலை 10.30 மணிக்கு ஆர்பாட்டம் இடம்பெற்றது.

போர் முடிவுற்று 10 வருடங்கள் கடந்த பின்னரும் கூட இந்த நாட்டில் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவில்லை. மக்களின் உரிமைகள் மீறப்பட்ட இந்த நாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழு எதற்காக செயற்படுகின்றது என்று தெரியவில்லை. எமது சிறுவர்கள், பெண்கள், கடத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியவில்லை. இந்த சம்பவங்கள் சிங்கள மக்களுக்கு மாத்திரமே. நாடும் அவர்களுக்காகவே. இந்த தினத்திலாவது சர்வதேச சமூகம் கண்மூடி இருக்காமல் பாரபட்சமின்றி இந்த அரசுக்கு அழுத்தங்களை வழங்கி எமக்கான தீர்வை பெற்றுத்தரவேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் தெரிவித்தனர். (எ-ஓ,6,20,56,110,246)

## காணாமல் ...

மல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது?

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.வரவு -செலவுத்திட்டத்தின்நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இன்று (நேற்று) சர்வதேச மனித உரிமைகள் தினம். இந்தத் தினத்தில் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர், சிறைகளில் வாடும் பிள்ளைகளை நினைத்துக் கதறும் பெற்றோர் என வடக்கு, கிழக்கு எங்கும் அவலக்குரல்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த நாளில் வடக்கு, கிழக்கு எங்கும் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி அலைந்து திரிந்து கொண்டிருக்கும் அந்த மக்களின் போராட்டத்தோடு நாங்கள் கைகோர்க்கும் அதே நேரத்தில் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளிலே அடைத்து வைத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகவே காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் இலங்கை அரசால் உருவாக்கப்பட்டது. அந்த அலுவலகத்தின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஏமாற்றப்பட்டு தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர். காணாமல்போனவர்கள் இறந்து விட்டார்கள் என்று உறவினர்களை ஒப்புக்கொள்ள வைத்து அவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் கொடுக்கும் முயற்சிதான் நடைபெறுகின்றது. வடக்கு, கிழக்கில் முழுமையான இனவாதக் கோணத்திலேயே நிதி அமைச்சின் திட்டங்கள் அமைந்துள்ளன.

தொல்பொருள் திணைக்களம் என்பது உலக நாடுகளிலே கலாசார அமைச்சுக்களின் கீழ் உள்ளன. ஆனால், இலங்கையில் அது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. கோடிக் கணக்கான நிதியை நிதி அமைச்சு மூலம் ஒதுக்கிக் கொடுத்து, தொல் பொருள் திணைக்களத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயமாக்குகின்ற பௌத்த மயமாக்குகின்ற செயற்பாடுகள்தான் மேற்கொள்ளப்படுகின்றன-என்றார். (எ-22)

# ஜப்னாவை வீழ்த்தியது கொழும்பு



லங்கா பிறிமியர் லீக் தொடரின் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஜப்னா ஸ்ரெலியன்ஸை 6 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றி பெற்றது கொழும்பு கிங்ஸ்.

ஹம்பாந்தோட்டை சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

கொழும்பு அணி சார்பில் சண்டிமல், இவன்ஸ் இணை ஆரம்ப வீரர்களாக களம் புகுந்தது. சண்டிமல் 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப தொடர்ந்து வந்த ட்ராமொன்ட்(12), மத்தியூஸ்(15), ரஸல்(21) என ஏமாற்றினாலும் மறுமுனையில் அதிரடி காட்டிய இவன்ஸ் 65 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 9 பவுண்டரிகள் அடங்கலாக 108 ஓட்டங்களைக் குவித்தார். இவன்ஸின் இந்த சதம் எல்.பி.எல் வரலாற்றில் முதலாவது சதமாக பதிவாகியது. இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 173 ஓட்டங்களை குவித்தது.

பந்துவீச்சில் லக்மல், வனிந்து ஹசரங்க தலா ஒவ்வொரு இலக்கை வீழ்த்தினர்.

174 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஜப்னா அணிக்கு சிறந்த இணைப்பாட்டம் ஒன்று பகிரப்படாமையால் சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்தன. இறுதியில் இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக அசலங்க(32), மலிக்(29) ஓட்டங்களையும் பந்துவீச்சில் ரஸல் 3 இலக்குகளையும் உதான, சமீர, அஹமட் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இவன்ஸ் தெரிவுசெய்யப்பட்டார். (ரி4)

# அரையிறுதியில் காலி

லங்கா பிறிமியர் லீக் தொடரின் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் கண்டி ரஸ்கர்ஸை 9 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது காலி கிளாடியேட்டர்ஸ்.

ஹம்பாந்தோட்டை சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற காலி அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

கண்டி அணி சார்பில் குர்பாஸ், பெரேரா இணை ஆரம்ப வீரர்களாக களம் புகுந்தனர். குர்பாஸ் (4), பெரேரா(0) என சொதப்பினர். அடுத்து வந்த குசல் மென்டிஸ் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க மற்றைய வீரர்கள் அடுத்தடுத்து பவிலியன் திரும்பினர். இறுதியில் 19.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக மென்டிஸ் 68 ஓட்டங்களையும் டெய்லர் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அமீர், துஷார, லக்சன், ஆராச்சிகே ஆகியோர் தலா இரு இலக்குகளையும் சன்டகன், ஜெயசூர்ய தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி அணிக்கு தொடக்க வீரர்களான குணதிலக, ஹஸ்ரதுல்லா ஷெஷாய் இணைந்து வலுவான ஆரம்பத்தை வழங்கினர். இறுதியில் 17 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக குணதிலக ஆட்டமிழக்காமல் 66 பந்துகளில் 94 ஓட்டங்களையும் ஷெஷாய் (20), அசான் அலி(2) ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக குணதிலக தெரிவுசெய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் நிகர ஓட்ட சராசரியின் படி கண்டி அணியை பின் தள்ளி அரையிறுதி சுற்றுக்குள் நுழைந்தது காலி கிளாடியெட்டர்ஸ். (ரி4)



## விலங்கு வேட்டைக்கான துப்பாக்கிகள் மீட்பு

வவுனியா, டிசெ. 11

வவுனியா பன்றிகெய்த குளம் மற்றும் நாவற்குளம் பகுதிகளில் விலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படும் சட்டவிரோத துப்பாக்கி கள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்ட விரோதமாக துப்பாக்கிகள் (இடியன்துவக்கு) மறைத்து வைக்கப்பட்டுள்ளன என ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாகப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. (ஓ.110)

கொரோனா உயிரிழப்பு

# 19 பேரின் சடலங்களை தகனம் செய்ய கோரிக்கை

கொழும்பு, டிசெ.11

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து இன்னும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள 19 பேரின் சடலங்களையும் தகனம் செய்யுமாறு கொழும்பு மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது. சடலங்களை இனியும் கொழும்பில் உள்ள பிரேத அறையில் வைக்க முடியாது எனவும் மாநகர சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த சடலங்கள் முஸ்லிம் மக்களுடையவை. இவை தகனம் செய்யப்படும் என்ற காரணத்தாலேயே, இவற்றை பொறுப்பேற்க உறவினர்கள் மறுக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

மேலும், உரிமை கோரப்படாத சடலங்களைத் தகனம் செய்வது தொடர்பில் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட அமைச்சு தயாராக உள்ளது எனச் சுகாதார சேவைகளின் துணை இயக்குநர் ஜெனரல் மருத்துவர் ஹேமந்தா ஹெரத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## தொடர் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, டிசெ.11

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர் மழைக்குச் சாத்தியம் உள்ளது என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள காலநிலை முன்னறிவிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (வ-இ)

# பொலிஸ் அலுவலர் கொலை: 21 வயது இளைஞர் கைது

மட்டக்களப்பு, டிசெ.11

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று - பாலமுனை பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் 21 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)



## கொரோனா பாதித்த பெண் இரட்டைக் குழந்தைகள் பிரசவிப்பு

கொழும்பு, டிசெ.11

கொரோனாவால் பாதிக்கப்பட்ட 23 வயதுடைய இளம் பெண் ஒருவர் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையில் இவர் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். இக் குழந்தைகள் குறைந்தளவான பிறப்பு எடையுடன் பிறந்துள்ளன.

ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிறப்பு குழந்தைப் பராமரிப்பு பிரிவு இல்லாததால் அவர்களைப் பராமரிப்பது கடினம் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், குழந்தைகளைப் பராமரிக்க மருத்துவமனை தற்காலிக ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தற்போது குழந்தைகள் தாயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ந-இ)

English Classes
Gr-1to O/L
Grammar With Syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 331 4608

கடை வாடகைக்குத் தேவை
யாழ் மாநகர எல்லைக்குள் அல்லது நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் சிறிய கடை வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு: 077 6280 685

1 நாள் ஊர் கோழிகுஞ்சுகள்
கலப்பின ஊர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு காடை குஞ்சு 1 நாள் - 25/=
விலை 60/= இடம்:- பண்ணாகம், சுழிபுரம். 077 33 22 433